DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Joy H. Selvanayagam

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
கனகாம்பிகை தங்கநகை அடகுமாடம்
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1289 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 18, 2020

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் மூன்று தமிழ்க் கட்சிகள் இணைந்து செயற்படுவதற்கு முயற்சி



இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலிலிருந்து இலங்கை அரசு விடுபட்டுச் செல்லாதிருக்கும் வகையிலும், இந்த விடயத்தில் சர்வதேசத்தின் பிரசன்னம் தொடர்ந்தும் நீடித்திருப்பதற்காகவும் அடுத்த மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசி-யக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன ஒன்றிணைந்து செயற்படுவதற்குக் கடும் முயற்சி எடுக்கப்படுகின்றது.

*(தொடர்ச்சி 3ம் பக்கம்)*





# கனடாவில் சிறியவர்களும் குழந்தைகளும் கோவிட்-19 தடுப்பூசிக்காக காத்திருக்க வேண்டுமாம்



கனடாவில் சிறியவர்ளும் குழந்தைகளும் குறிப்பாக 16 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசிக்காக காத்திருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இதற்கு முக்கிய காரணங்கள் பல உள்ளன என்று குறிப்பிட்டுள்ள கனடாவின் மத்திய சுகாதார மையத்தின் முக்கிய அதிகாரிகள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

தற்போது இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்ற கோவிட்-19 தடுப்பூசிகள் கட்டாயமாக 16டி வயதுக்கு உட்டபட்டவர்களுக்கு ஏற்புடையது அல்ல என்றும், மேலும் முக்கியமாக கோவிட்-19 பரவலாலும் நோயின் பாதிப்பாலும் அச்சமடைந்துள்ளவர்கள் வயதில் அதிகமானவர்கள் என்றும் சுகாதாரப் பணிக-ளிலும் மருத்துவப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள முன்வரிசைப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அத்துடன் நோயுற்றவர்களை நேரடியாக இருந்து கவனித்து சிகிச்சை அளிப்பவர்கள் என பல தரப்பினர் முதலில் தடுப்பூசி செலுத்தப்படுவதில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயமாக கருத்துத் தெரவித்த ஒன்றாரியோவில் உள்ள ஒரு வைத்தியசாலையின் மூத்த அதிகாரி ஒருவர்" கோவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்படும் பணியானது மிகவும் மேற்கொள்ளப்படுகின்றது என்றும். தொற்றினால் விரைவில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பெற்று இந்த சேவை இடம்பெற்றுவருகின்றது என்றும், உதாரணமாக முதியோர் இல்லங்களில் பணியாற்றும் ஊழியர்கள், அங்கு தங்கியிருக்கும் முதியோர்கள், சுகாதார நல உத்தியோகத்தர்கள் ஆகியோர் முக்கிய மானவர்களாக கருதப்படுகின்றார்கள், எனினும் சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் தாமதாக தருவிக்கப்படும் விடயமானது சற்று கவலை அளிப்பதாகவும் குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில் "சில பிரதேசங்களில் சிறுவர்கள் சி-றிய அளவில் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்களின் பலருக்கு அபாயகரமான நிலை தோன்றலாம் என்றும், பல "நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் மற்றும் அங்கவீனர்கள் ஆகி-யோர் சிறுவர்களானாலும் நிச்சயமாக தடுப்பூசி செலுத்தப்பட வேண்டியவர்கள் எனக் குறிப்பிட்டார்

இதேபோன்று இன்னொரு மருத்தவர் தனது கருத்தைப் பதிவு செய்கையில், கோவிட்-19 இற்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதை நாம் உலகளிவில் கொண்டாட வேண்டும் என்றும், நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பான இந்த தடுப்பூசி விடயத்தில் நாம் இளையவர்களை மறந்துவிட்டது பாதகமான ஒரு தவறு என்றும் குறிப்பிட்டார்

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கனடாவின் மத்திய சுக-ாதார மையத்தின் பிரதம மருத்துவ ஆலோசகரான டாக்டர் சுப்ரியா சர்மா தனது கருத்தைத் தெரிவிக்கையில் "சிறுவர்களுக்கு நாம் தற்போதையை நிலையில் தடுப்பூசியை செலுத்தாவிட்டாலும், அவர்களைச் சூழ்ந்திருக்கும் பெரியவர்களுக்கு கட்டாயம் தடுப்பூசியை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதற்காக தங்கள் நிறுவனம கலந்துரையாடல்களை நடத்திவருவதாகவும் கூறினார்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

**416.298.2777**

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

BASEMENT வாடகைக்கு உண்டு

Bellamy / Eglinton
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டில் 2 bedrooms, 2 washrooms with separate entrance ஒன்று மேலும் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to all amenities.

Call: (416) 707-4350
(416) 659-0386

விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில் வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில் வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 832-6345

HELP WANTED

Full-time & Part-time
Spray Painters & Sanders
needed for a
kitchen furniture finishing shop.

Call:
(416) 636-3655

AZ Drivers Wanted
Hiring AZ Driver For Single & Team DriverFor USA Runs.
Must Have Minimum 6 Months Driving Experience.
Please Call: Vije Bala
(437) 997-6478

## உதயன் கதிரோட்டம்

# முன்னைய காலங்களில் அரசு சார்பு பிரதிநிதிகளாக ஐ. நா சென்றவர்கள்

மீண்டும் ஒரு மார்ச் மாதம் பிறந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு, உலகெங்குமிருந்த பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநதிகளை அழைக்கின்ற அந்த நாள் வரப்போகின்றது. கோவில் திருவிழாக்கள் நெருங்கி வருகின்ற போது ஊர் மக்கள் ஒன்று கூடி ஆயத்தமாவது போன்று 2021 மார்ச் மாதம் நம்மவர்கள் பல சென்று வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நேரத்தில் இலங்கையில் உள்ள பிரதான தமிழ்க் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி ஒன்று திரைமறைவில் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதும் இன்றைய செய்திகளில் முக்கிமானதொன்றாகும்.

முன்னைய காலங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தான் தனித்து எண்ணிய காரியங்களை எவருக்கும் அஞ்சாமல் செய்து காட்டியது. அந்த கடசியின் பிரதிநிதிகள் தமிழர்கள் சார்பாகவும் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சார்பாகவும் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றப் போகின்றோம் என்று அறிக்கைகளை வெளியிட்டுவிட்டுச் சென்றாலும், அங்கு ஒன்றுமே பயனுள்ள வகையில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அதற்கு மேலாக அரசாங்கத்திற்கு விரோதமாக தோன்றக் கூடிய சந்தர்ப்பங்களையும் நீர்த்துப்போகும் படியான செயற்பாடுகள் இடம்பெற்றதையும், இந்த விடயத்தில் கவனிப்புக் கொண்டவர்கள் தெரிந்து கொண்ட விடயமாகும்.

இந்த நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்கினேஸ்வரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகியிருக்கும் நிலையில் அவர்களுடைய கருத்துக்களை அறிவதிலும் சர்வதேச சமூகம் ஆர்வம்காட்டிவருகின்றது. என்பதை அறிந்தும் அதனைவிட, அவர்களும் இம்முறை ஜெனீவாவை அணுகுவதற்கான புதிய வியூகங்களை அமைத்துவருகின்றார்கள் என்பதைத் தெரிந்து கொண்டும் எமது மக்களுக்காக இனியாவது எதையும் செய்ய முயலுவோம் என்றும் சிலர் முன்வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

உண்மையில் எமது ஆசிரிய பீடத்திற்கு கிடைத்த தகவல்களின்படி கடந்த காலங்களில் தகுந்த முறையில் அரசுக்கு எதிராகவும் அதன் போர்க்குற்றங்களை நிரூபிக்கும் வகையில் போதிய சான்றுகள் அல்லது வாதங்கள் அங்கு நிகழ்த்தப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக பெரும்பாலும் அரசாங்கம் தனது தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களே மிக அதிகமாக உள்ளதென்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சில ஆர்வலர்கள், தொடர்ந்து இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் படி மனித உரிமைகள் சபையில் போராடுவது என்பது கல்லில் நார் உரித்த கதையாகவே முடியும் என்றே பேசப்படுகின்றது

இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம் மார்ச் மாதம் முடிவுக்கு வருவதால், வரப்போகும் கூட்டத் தொடர் முக்கியமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளையில் அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றமும், இலங்கைப் பொதுத் தேர்தலில் தீவிர தேசியவாதப் போக்கைக்கொண்ட இரு கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருப்பதும் எமக்கு சார்பான விடயங்களாக நோக்கப்பட்டாலும், அவை எந்தளவிற்கு வெற்றிகளை ஈட்டித் தரும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்

மேலும் இலங்கை அரசிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகிய விடயங்களைப் பொறுத்தவரையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைய எந்தளவிற்கு பயனளிக்கப்போகின்றது என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கஜேந்திரகுமார் தெரிவித்துள்ள கருத்துக்களையும் நாம் கவனத்தில் எடுத்துப் பார்க்க வேண்டும்.

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் மூன்று தமிழ்க் கட்சிகள் இணைந்து செயற்படுவதற்கு முயற்சி

இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலிலிருந்து இலங்கை அரசு விடுபட்டுச் செல்லாதிருக்கும் வகையிலும், இந்த விடயத்தில் சர்வதேசத்தின் பிரசன்னம் தொடர்ந்தும் நீடித்திருப்பதற்காகவும் அடுத்த மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன ஒன்றிணைந்து செயற்படுவதற்குக் கடும் முயற்சி எடுக்கப்படுகின்றது.

அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், விக்னேஸ்வரன் அணியையும், கஜேந்திரகுமார் அணியையும் ஒருங்கிணைக்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளார் என அறியமுடிகின்றது. 2015ஆம் ஆண்டு இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி, அதன் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அவகாசம் வழங்கப்பட்டும் அதிலுள்ள பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் தற்போதைய அரசு அத்தீர்மானத்திலிருந்து விலகவுள்ளது என அறிவித்துள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள கூட்டத்தொடர் தொடர்பில் தமிழ்த் தரப்பினர் இடையே முன்னெடுக்கப்பட்டுள்ள கூட்டுச் செயற்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்,

”30.:.1 தீர்மானத்தை உயிர்ப்புடன் வைத்துக்கொள்வதா இல்லை புதிய தீர்மானமொன்றை உருவாக்கி நிறைவேற்றுவதா என்பது உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலிருந்து இலங்கை விவகாரம் நீங்காது நீடிக்கச் செய்திருப்பதற்கான உபாயங்களை ஏனைய தரப்புகளுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது பற்றியதொரு முன்மொழிவு விக்னேஸ்வரனிடத்திலும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடத்திலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜெனிவா விடயத்தில் கடந்த காலத்தில் எனது நிலைப்பாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தாலும், தற்போது முன்மொழியப்பட்டுள்ள விடயங்களின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு சாதகமாகப் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது” என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிடுகையில்,

”சுமந்திரனின் முன்மொழிவுகளுடன் கூடிய ஆவணம் எனக்குக் கிடைத்துள்ளது. அதுபற்றி ஆராய்ந்து வருகின்றோம். எமது கட்சி இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் கூடவுள்ளது. அதன்போது சுமந்திரனின் முன்மொழிவு தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுப்போம்” என்றார்.

எனினும், கொழும்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சில சட்டத்தரணிகளுடன் அந்த ஆவணம் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துரையாடினார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், கட்சிக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பின்னரேயே இறுதி முடிவை உத்தியோகபூர்வமாக சுமந்திரனுக்கு அறிவிப்பது என கஜேந்திரகுமார் தீர்மானித்துள்ளார் எனவும் மேலும் தெரியவந்தது.

அதேநேரம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முன்மொழிவுகள் பற்றிய முடிவொன்றை எடுக்கவுள்ளார் என்று குறிப்பிட்டார்.

எனினும், இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம், சர்தேச நீதிமன்றம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை நாடுவதன் ஊடகாவே நியாயமான நீதி கிடைக்கும் என்பதே தனது நிலைப்பாடு என்றும் விக்னேஸ்வரன் கூறினார்.

எவ்வாறாயினும், நான் ஐ.நா.மனித உரிமைகள் சபையை மட்டும் மையப்படுத்தாது நீதித்துறை சார்ந்தே நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில், சுமந்திரன் ஐ.நா.மனித உரிமைகள் சபையை மையப்படுத்திய முன்மொழிவையே என்னிடத்தில் சமர்ப்பித்துள்ளார். ஆகவே, அதன் சாதக, பாதக நிலைமைகள் பற்றிய ஆழமான ஆய்வு அவசியம். அதற்காக எனக்கு சில நாட்கள் அவகாசம் தேவைப்படுகின்றது. எனினும், விரைவில் அவருடைய முன்மொழிவு குறித்து விரைவில் என்னுடைய நிலைப்பாட்டை அறிவிப்பேன் என்றும் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்

# இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் தொகை 160 ஆக அதிகரித்துள்ளது



இலங்கையில் மேலும் மூவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளது.

கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண், தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண், பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் 03 வாக்குகளால் தோல்வி




யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டிக்கான வரவு - செலவுத் திட்டம் 03 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 21 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிக்கான வரவு - செலவுத் திட்டம், மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்டினால் கடந்த 2ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமர்ப்பணத்தின்போது, அதற்கு ஆதரவாக 19 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டு முதலாவது வாசிப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இன்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 03 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு எதிராக வாக்களித்தனர்.

இதனையடுத்து மாநகர சபையின் 2021ஆம் ஆண்டிக்கான வரவு - செலவுத் திட்டம் 03 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இங்கிலாந்து ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் பாராட்டுக்களும் அன்பளிப்பும்



யாழ்ப்பாணத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கடந்த 15-12-2020 அன்று இங்கிலாந்து ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் பாராட்டுக்களும் அன்பளிப்பும் அளிக்கப்பெற்றன.

யாழ்ப்பாணம் காரநகரர் மெய்சண்டான் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மேற்படி இரண்டு மாணவர்களுக்கும் கலாநிதி ஆர். நித்தியானந்தன் அனுசரணையில் மடிக் கணணிகள் வழங்கப்பெற்றன.

இங்கு காணப்படும் படங்கள் யாழ்பபாணத்தில் எடுக்கப்பட்டவையாகும்.



# கந்தளாயில் வீழ்ந்தது விமானப்படை விமானம்! – விமானி பலி

விமானப்படைக்கு சொந்தமான PT-6 ரக பயிற்சி விமானம் கந்தளாய் சூரியபுர ஜனரஞ்சன குளத்துக்கு அருகில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் விமானி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனக்குடா வான்படை முகாமிலிருந்து புறப்பட்ட விமானம், கந்தளாய் வான்பரப்பில் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்புகள் இல்லாமல் போனதாக விமானப்படை பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

விமானத்தில் பயிற்சி விமானி விமானி மாத்திரமே பயணித்துள்ளார் என்றும், விமானத்துக்குள் சிக்கிய விமானி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.





# யாழ்ப்பாணத்தில் ஐவருக்கு கொரோனா தொற்று: வவுனியாவில் மூவர்!

யாழ். மருத்துவபீட ஆய்வு கூடத்தில் இன்று 98 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் எட்டுப் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூரத்தி தெரிவித்துள்ளார்.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் ஏழாலை பகுதியில் மூவருக்கும் இணுவிலில் இருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் மூவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில், அவர்களிர் ஒருவர் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்தவர் எனவும் ஏனைய இருவரும் வவுனியா திருநாவற்குளம் மற்றும் கற்குழியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் அனுராதபுர போதனா வைத்தியசாலை ஆய்வுக்கூடங்களில் செய்யப்பட்ட முடிவுகள் பின்னர் வெளியாகும்.

# ஒன்றாரியோ மாகாணத்திலுள்ள நகரசபைகளுக்கான நிதி ஒதுக்கீடு



நகரசபைகளுக்கு நிதியுதவி அளிக்கவும், எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரவுசெலவுகளில் இப்போதைய செலவுகளினால் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையின் தாக்கம் நெருக்கடிகளை ஏற்படுத்தாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்குமென ஒன்றாறியோ அரசாங்கம் மேலதிகமாக 695 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்நிதி முதலீடுடானது, கடந்த கோடை காலத்தில் அறிவிக்கப்பட்ட மத்திய - மானில அரசுகளின் "பாதுகாப்புடன் மீள ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தத்தின்" முதற்கட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுடன், கோவிட்-19 காலகட்டத்தில் நகரசபைகளுக்கும் அவற்றுடன் இணைந்து இயங்கும் சக கட்டமைப்புகளுக்கும் முக்கியமான சேவைகளை வழங்கவும் உதவும்.


மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரொறன்ரோ நகரசபை மொத்தமாக 398, 275 டொலர் நிதியினைப் பெறுகிறது. முக்கியமான சேவைகள் இயங்குவதற்குத் தேவையான செலவுகளை ஈடுசெய்யவும், ரொறன்ரோ நகரசபையின் செலவுகள் 2021ஆம் ஆண்டுக்குக் கடத்தப்பட்டு அடுத்த ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை ஏற்படாதிருக்கவும் வழங்கப்படும் இந்நிதியானது, தேவைகளுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், போக்குவரத்துக்கான நிதியத்தின் அடுத்த கட்டங்கள் குறித்து ஒன்றாறியோ அரசு இன்று நகரசபைகளுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளது. இதன்படி, நகரசபையின் போக்குவரத்துக் கட்டமைப்புகளுக்காக ஒன்றாறியோ மானில அரசு 1.3 பில்லியன் டொலர்களை ஒதுக்குகிறது. இது மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 700 மில்லியன் டொலர் ஒதுக்கீட்டை விட மேலதிகமானதாகும் என்பதுடன், இந்நிதியானது மேலதிகமாகத் தேவைப்படும் துறைகளுக்கு, அவற்றின் தேவைகளின் அடிப்படையில் வழங்கப்படும். இந்த நிதி குறித்த மேலதிக விவரங்களை வருகின்ற ஜனவரி மாதத்தில் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.



*விஜய் தணிகாசலம், மானில சட்டமன்ற உறுப்பினர்*
*ஸ்காபரோ - றூஜ் பார்க்*

# இந்தியாவின் 72வது குடியரசு தின விழாவில் இங்கிலாந்து பிரதமர் கலந்து கொள்கிறார்



இங்கிலாந்து நாட்டின் வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் வளர்ச்சிவிவகாரங்கள் துறை அமைச்சர் டொமினிக் ராப், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார். அப்போது இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனுடன் சமீபத்தில் தொலைபேசியில் பேசியதை நினைவு கூர்ந்த பிரதமர் நரேந்திர மோடி, கொவிட் பாதிப்புக்கு பிந்தைய உலகில், இந்தியா இங்கிலாந்து இடையேயான கூட்டுறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இருதரப்பு உறவின் முழு திறன்களின் பயன்களைப் பெற, வர்த்தகம், முதலீடு, ராணுவம், பாதுகாப்பு, மக்கள் இடம் பெயர்வு, கல்வி, எரிசக்தி, பருவநிலை மாற்றம், ஆரோக்கியம் ஆகியவற்றை உள்ளடக்கிய, முழு அளவிலான திட்டத்தை வகுக்க அவர் அழைப்பு விடுத்தார். இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனின் வாழ்த்தைத் தெரிவித்த, வெளியுறவுத்துறை அமைச்சர் டொமினிக் ராப், இங்கிலாந்து சமீபத்தில் நடத்திய பருவநிலை இலட்சிய மாநாட்டில் பங்கேற்றதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்தார். பகிரப்பட்ட மதிப்புகள், நலன்கள் மற்றும் பொதுவான உலகளாவிய சவால்களை ஒன்றாக எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுடனான உறவை அதிகரிக்க இங்கிலாந்து அரசு முன்னுரிமை அளிப்பதாக அவர் கூறினார். 2021ம் ஆண்டு இங்கிலாந்து தலைமையில் நடக்கும் ஜி7 கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க அழைப்பு விடுத்து, இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் அனுப்பிய கடிதத்தை பிரதமரிடம் டொமினிக் ராப் வழங்கினார். இதை ஏற்றுக்கொண்ட பிரதமர், அவருக்கு நன்றி தெரிவித்தார். இந்தியாவின் 72வது குடியரசு தின விழாவில், தலைமை விருந்தினராகப் பங்கேற்கும் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனை அடுத்த மாதம் வரவேற்பதில் ஆர்வமுடன் உள்ளதாகவும் பிரதமர் மோடி தெரிவித்தார்.



# ஆஸி ஆடுகளத்தில் ருத்திர தாண்டவம் ஆடிய தமிழர்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

ஆஸ்திரேலியத் தலைநகர் கான்பெராவில் இரண்டு தோல்விகளுக்கு பிறகு ஒரு ஆறுதல் வெற்றி. முதல் இரண்டு போட்டிகளின் தோல்வியை ஒப்பிடும் போது இது பெரிய வெற்றி இல்லை. எனினும் இந்திய அணிக்கு இந்த வெற்றியில் ஈஸ்வரனைப் போல் துணையிருந்து வெற்றியைத் தேடித் தந்தவர் ஒரு சாமானியர்.

அதன் பிறகு கிரிக்கெட் இலக்கணங்களுக்கு அப்பாற்பட்டு பொழுதுபோக்கு மட்டுமே குறி என்று பிரபலமாக இருக்கும் அணிக்கு 20 ஓவர் போட்டிகளில் இந்தியா வெற்றிபெற அம்பலவாணனின் ஆட்டமே உதவி-யது.



இறை நம்பிக்கையற்றவர்கள் கூட இப்போது நடராஜரை வாழ்த்தி போற்றி புகழ ஆரம்பித்துள்ளனர். அதுதான் கூத்தனின் சிறப்பு.

ஆஸி ஆடுகளத்தில் தனது "பாசுபதாஸ்த்திரத்தை" எய்து அணியின் வெற்றிக்கு அடிகோலிட்டவர் இந்திய அணியின் ஆபத்பாந்தவனான "யார்க்கர் மேன்" "நம்மவர்" தமிழர் நடராஜன்.

இடது கை வேகப்பந்து வீச்சாளரான இவர் இன்றைய கிரி-கெட் உலகில் துல்லியத்துக்கு உதாரணமாகத் திகழ்கிறார். யார்க்கர் வீசுவது சாதாரணமான வி'யம் அல்ல. அது பல விஷயங்களை உள்ளடக்கியது. ஒரு நபரின் உயரம், அவரது கையின் வீச்சு, உடலியக்கம், ஆடுகளத்தில் அளவாக வீசுதல், பந்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பல வி'யங்கள் அதில் அடங்கும்.

யார்க்கர் கலையைச் சிறப்பாக கற்று அதன் மூலம் எதிரணியைத் திணரடித்து மிரட்டியதில் வல்லவர்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர். வெஸ் ஹால், சார்லி க்ரி.்.பித், ஆண்டி ராபர்ட்ஸ், மைக்கெல் ஹொல்டிங், ஜோயல் காரணர். மால்கம் மார்ஷல் என்று பட்டியல் நீளும்.

இது அவர்கள் பெயரைக் கேட்டாலே "சும்மா அதிருதில்ல" கதை தான்.

இந்தியாவில் கபில்தேவ் மட்டுமே மேற்கிந்தியத் தீவுகள் அணி-யினருடன் ஓரளவுக்கு ஒப்பிடும் நிலையில் இருந்தார். அவருக்கு பிறகு இப்போது தங்கராசு நடராஜன். அவரிடம் வேகம் விவேகம் இரண்டும் உள்ளது சிறப்பம்சம்.

ஆடம்பரமில்லாத சாமானியரான அவரின் வெற்றிக்கான மந்திரம் அடிப்படைகளைச் சிறப்பாகச் செய்வது, அதற்காக கடினமாக உழைப்பது மட்டுமே.



இந்தாண்டு நடைபெற்ற ஐபிஎல் போட்டிகளில் அவரது திறமையை உலகம் அறிந்தது. "யார்க்கர்" கலையை அவர் ஒரே இரவில் கற்கவில்லை. அதற்கான வாய்ப்பும் அவருக்கு கிடைக்கவில்லை.

தமிழகத்தின் சேலம் மாவட்டத்திலுள்ள சின்னம்பட்டி அவரது சொந்தவூர். சமூக பொருளாதார ரீதியாக அவரும் அவரது ஊரும் பின்தங்கிய நிலை. தந்தை உள்ளூர் நூற்பாலையில் அன்றாடம் வேலைக்குச் செல்லும் கூலித் தொழிலாளி. தாய் சாலை-யோரம் தேநீர் கடை நடத்தி வந்தார். ஐந்து பிள்ளைகளின் தலைமகன் நடராஜன். கிரிக்கெட் மீது ஆர்வமுள்ள ஏழை எளியோர்களின் கனவை ஓரளவுக்கு நிறைவேற்றுவது சாலைகளிலும், முட்டுச் சந்துகளிலும் விளையாடப்படும் டென்னிஸ் பால் கிரிக்கெட். அதாவது டென்னிஸ் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படும் பந்தைக் கொண்டு, யார் புண்ணியத்திலாவது கிடைத்த பழைய மட்டையைக் கொண்டு, ஆங்காங்கே விளையாடுவது.

அப்படியானவர்களுக்குத் தொலைக்காட்சியின் தமது கனவு நாயகர்கள் ஆடுவதைப் பார்ப்பதே அதிகபட்ச மகிழ்ச்சியளிக்கும். ஆனாலும் திறமையை நீண்ட நாள் கவனிக்காமல் புறந்தள்ள முடியாது. அப்படியான வாய்ப்பொன்று நடராஜனுக்கு கிட்டியது. அவரது திறமையைக் கண்ட உள்ளூர் கிரிக்கெட் வீரர் ஜெயப்பிரகாஷ் அவருக்கு உதவ முன்வந்தார்.

சேலத்திலிருந்து சென்னைக்கு வந்த அவருக்கு நல்ல தொடர்புகள் கிடைக்க தனது திறமைகளையும் மேம்படுத்திக் கொண்டார்.

தமிழக அணியில் இடம்பிடித்த அவர் ஜான் ஏற முழம் சறுக்கியது. அவரது பந்துவீச்சின் கோணம் அனுமதிக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக இருக்கிறது என்று பிரச்சனை எழுந்ததையடுத்து அதை சரிசெய்ய வேண்டிய சூழலுக்கு ஆளானார். இதை ஒரு பின்னடைவாகப் பார்க்காமல், சவாலா-க ஏற்று ஓராண்டுக்கும் மேல் தீவிர பயிற்சியை மேற்கொண்டு அதை சரி செய்து விமர்சகர்களின் வாயை அடைத்தார். விடாமுயற்சி அவரது ஏறுமுகத்துக்கு வழிவகுத்தது.



நான்காண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய தமிழ்நாடு பிரீமீ-யர் லீக் கிரிக்கெட் போட்டியின் முதல் பதிப்பிலேயே தனது முத்திரையைப் பதித்தார் நடராஜன். அந்தப் போட்டியில் அவரது தி-றமைகளைக் கவனித்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அவரை அடுத்த ஆண்டு-2017 ஐபிஎல் போட்டிகளில் தமது அணிக்கு விளையாட மூன்று கோடி ரூபாய் கொடுத்து அவரை வாங்கியது. அது அவரது வாழ்க்கையில் மாபெ-ரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

அந்தப் பணத்தில் தனது சகோதரிகளுக்கு நல்ல கல்வியையும் பெற்றோருக்கு வசதியான வீடொன்றையும் அவரால் அளிக்க முடிந்தது.

அதுமட்டுமின்றி சேலத்தில் ஒரு பயிற்சி மையத்தைத் துவக்கி இளம் வீரர்கள் தமது திறமையை மேம்படுத்திக் கொள்ள வழி ஏற்படுத்தினார்.

பஞ்சாப் அணிக்காக விளையாடிய போது அவர் பெரி-தாகச் சாதிக்கவில்லை என்றாலும், அவரது திறமையை கண்டுகொண்டார் முத்தையா முரளிதரன். கிரிக்கெட் உலகில் டெஸ்ட் போட்டிகளில் மிக அதிகளவு விக்கெட்டுகளை எடுத்துள்ள முரளிதரனுக்கு நடராஜனின் திறமை மீது ஆழமான நம்பிக்கை பிறந்தது. இதையடுத்து தான் பயிற்சியாளராக இருக்கும் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிக்கு நடராஜனை இழுத்துக் கொண்டார் முரளி.

எனினும் 2018 மற்றும் 2019 சீசனில் அவருக்கு விளையாட வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால் இந்தாண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற போட்டிகளில் அவரது பந்துவீச்சில் தீப்பொறி பறந்தது. அவரது திறமையைக் கண்ட இந்திய அணியின் தேர்வுக் குழு அவரை தற்போது ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறும் தொடருக்காகத் தேர்வு செய்தது.



இத் தொடரின் முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி தோல்வியடைய, கடைசிப் போட்டியில் ஆடும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. முதல் போட்டியிலேயே இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அடுத்து நடைபெற்ற டி20 போட்டிகளில் அவர் தவிர்க்க முடியாத-வரானார். அந்த நம்பிக்கையை நிரூபித்தார். இதில் இந்திய அணி வென்ற இரு போட்டிகளிலும், தோல்வியடைந்த ஒன்றிலும் சரி அவரது பங்களிப்பு காத்திரமாக இருந்தது.

அவரது ஆட்டத்தை சிட்னியில் கண்ட ஒரு ஆர்வலரின் கருத்து "நம்மவரின்" தன்மையை வெளிப்படுத்துகிறது.

"நடராஜன் ஆட்டத்தில் மட்டுமல்ல, அனைத்து வகையிலும் மிகவும் கண்ணியமானவராகத் தெரிகிறார். அவரிடம் வேகம் பந்து வீச்சில் மட்டுமே யதார்த்தத்தில் மிகவும் விவேகத்துடன் இருக்கிறார்".

மிகவும் போட்டி நிறைந்த இந்திய கிரிக்கெட் உலகில் அணியில் இடம் பெறுவதே மிகவும் சவாலான விஷயம். அப்படி இடம் கிடைத்தாலும் ஆடும் வாய்ப்புக்காக காத்திருக்க வேண்டிய சூழல் இருக்கும். ஆடும் வாய்ப்பு கிடைத்தாலும் சறுக்கிவிடாமல் இருப்பது அவசியம்.

சிட்னியில் நடைபெற்ற மூன்றாவது டி20 போட்டியில் இந்தியா தோல்வியடைந்தாலும், முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றதையடுத்து தொடருக்கான கோப்பை இந்தியாவுக்கு அளிக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொண்ட அணியின் தலைவர் விராட் கோஹ்லியும், ஆட்டத் தொடரின் நாயக் விருதைப் பெற்ற ஹார்திக் பாண்ட்யாவும் அதை நடராஜனிடம் அளித்து கௌரவப்படுத்தியது மிகவும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அந்த அன்பையும் அபிமானத்தையும் பெற்றுள்ள தங்கராசு நடராஜன் இதுவரை அவர் சறுக்காமல் உறுதியாக முன்னேறி வருகிறார். அது தொடரும் என்று நம்புவோம்.


TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# ஒரு பன்னாட்டுத் தீர்ப்பும் இலங்கைக்கான பாடமும்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

உலகின் பல நாடுகளின் நீதிமன்றங்கள் குறிப்பாக உச்சநீதிமன்றங்கள் முக்கியமான வழக்குகள் குறித்த தீர்ப்புக்களை மேற்கோள் காட்டித் தீர்ப்புகளை வழங்குவது நடைமுறையிலுள்ளது.

அவ்வகையில் பன்னாட்டு நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்பைப் புறந்தள்ளுவது சர்வதேசளவில் அந்தந்த நாடுகளுக்கு அவப்பெயரையும் இராஜதந்திர ரீதியில் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தும்.

உதாரணமாக நெதர்லாந்து தலைநகர் தி ஹேகிலுள்ள சர்வதேச நீதிமன்றம், நிரந்தர தீர்ப்பாய நீதிமன்றம், சுவிஸ்சிலுள்ள விளையாட்டுத்துறைக்கான மேல்முறையீட்டு நீதிமன்றம், லக்சம்பர்கிலுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கான நீதிமன்றம், ரோமிலுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கான மனித உரிமைகள் நீதிமன்றம் போன்ற பல மன்றங்கள் அவ்வகையில் செயல்படுகின்றன.

இந்த பன்னாட்டு நீதிமன்றங்கள் பெரும்பாலும் ஐ நா மன்றத்தின் தீர்மானம் அல்லது ஆதரவுடன் நிறுவப்பட்டவை. எனவே அந்த நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நாடுகளைக் கட்டுப்படுத்தும், அல்லது மரபுப்படி அந்தந்த நாடுகள் அந்தத் தீர்ப்புகளை ஏற்கும்.

ஆனாலும் சில நாடுகள் அந்தத் தீர்ப்புகளை ஏற்று மதித்து நடக்காமலிருந்த சூழல்களும் அதையடுத்து அவை ஐ நா மன்றத்தில் கண்டிக்கப்படுவதும், பல வேளைகளில் பொருளாதாரத் தடைகளுக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படும்.

கிழக்கு ஆப்ரிக்க நாடுகளுக்கான நீதிமன்றமும் அதன் தீர்ப்பும்



அப்படியான நீதிமன்றங்களில் கிழக்கு ஆப்ரிக்க நாடுகளுக்குக்கான நீதிமன்றமும் (East African Court of Justice) ஒன்று.

தான்சானியாவைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் இந்த நீதிமன்றம் சமீபத்தில் அளித்த தீர்ப்பொன்று பல இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளுக்குப் பொருந்தும் வகையில் உள்ளது.

முதலில் கிழக்கு ஆப்ரிக்க நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு என்னவென்று பார்ப்போம்.

ருவாண்டா நாட்டைச் சேர்ந்த தொழிலதிபர் டிரிபர்ட் ருஜுகிரோ அயபட்வா கனடாவில் வாழ்ந்து வருகிறார். ஆப்ரிக்காவின் முன்னணி தொழிலதிபரும் கோடிஸ்வரருமான ருஜுகிரோ ருவாண்டாவின் தலைநகர் கிகாலியிலுள்ள யூனியன் டிரேட் செண்டர் எனும் வணிக வளாகத்தை இருபது மில்லியன் டாலர்கள் முதலீட்டில் கட்டினார்.

அதை கடந்த 2006 முதல் இப்போது வரை அதிபராக இருக்கும் பால் ககாமே திறந்து வைத்தார். பின்னர் அவருக்கும் அரசுக்குமான உறவு கசந்தது. இதையடுத்து அவர் கனடாவில் வசித்துவந்த நிலையில், உரிமையாளர் நாட்டில் இல்லை என்று கூறி, “கைவிடப்பட்ட சொத்துச் சட்டத்தின் அடிப்படையில்” அவரது வணிக வளாகத்தை அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

இதையடுத்து அந்த வணிக வளாகத்தில் அலுவலகங்கள், கடைகள் ஆகியவற்றை வைத்திருந்தவர்கள் அதற்கான வாடகையை அரசுக்குச் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டது அரசின் கரமான ருவாண்டா வருவாய் அதிகார சபை. அவ்வகையில் குறிப்பிட்ட ஒரு வங்கிக் கணக்கில் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்ட வாடகைக் கட்டணம் மாதம் ஒரு லட்சத்து இருபதாயிரம் அமெரிக்க டாலர்.



பின்னர் அந்த வளாகத்தை முழுமையாகக் கையகப்படுத்த அரசு எடுத்த முடிவே அதற்கு வினையாக அமைந்தது. அதற்கு அரசு கூறிய காரணம் நகைப்புக்குரியதாக இருந்தது என்று நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது. தனது கட்டுப்பாட்டில் இருந்த வணிக வளாகத்திலிருந்தவர்கள் அரசு கூறிய வங்கிக் கணக்கில் வாடகை செலுத்திய நிலையில், ருஜுகிரோவில் நிறுவனம் இரண்டு ஆண்டுகள் அரசுக்கு வரி கட்டவில்லை எனவே அந்த வளாகத்தை முழுமையாகக் கையகப்படுத்தப்படுவதாக அரசு கூறியது.

தான் நாட்டில் இல்லை எனக் கூறி தனக்கு வர வேண்டிய வாடகையை அரசு தன் கணக்கிற்கு மாற்றிக் கொண்டதையும், பின்னர் முற்றாக அந்த வளாகத்தை அரசு கையகப்படுத்தியதையும் எதிர்த்து உள்நாட்டு நீதிமன்றத்தில் ருஜுகிரோ தொடுத்த வழக்கில் எதிர்பார்க்கப்பட்ட வகையில் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வர, அதை எதிர்த்து கிழக்கு ஆப்பிரிக்க நீதிமன்றத்தை அவர் அணுகினார்.

வழக்கில் இரண்டு முக்கிய அம்சங்களை அவர் முன்வைத்தார். முதலாவது “கைவிடப்பட்ட சொத்து சட்டத்தின்” கீழ் தனது சொத்து வகைப்படுத்தப்பட்டது, இரண்டாவது அதை அரசு கையகப்படுத்தி உரிய இழப்பீடு அளிக்காமல் அதை விற்றது தவறு என்று கூறினார்.



வழக்கை விசாரித்துத் தீர்ப்பளித்த மூன்று நீதிபதிகளும் ஒருமனதாக அரசின் இரண்டு முன்னெடுப்புகளும் சட்டவிரோதம் என்று கூறி, அந்த வணிக வளாகம் அவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் மேலும் அவருக்கு நட்ட ஈடாக ஐந்து லட்சம் டாலர்கள் மற்றும் நீதிமன்றச் செலவுகள் அளிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அதாவது கைவிடப்பட்ட சொத்து என்று கூறி அரசு அதைக் கையகப்படுத்தியது தவறு என்றது நீதிமன்றம்.


இந்தத் தீர்ப்பை மேற்கோள் காட்டி மேலும் பல வழக்குகள் ருவாண்டாவில் தொடுக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. அப்படி ஏற்பட்டால் அது அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும்.

அந்தச் சட்டத்தில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

“கைவிடப்பட்ட சொத்துச் சட்டம்”

ருவாண்டில் நிலவும் “கைவிடப்பட்ட சொத்துச் சட்டம் அடிப்படையிலேயே தவறானது என்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அந்நாட்டில் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற மிக மோசமான இனக்கலவரங்கள் மற்றும் உள்நாட்டு மோதல்களுக்கு காரணமானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுபவர்களை இலக்கு வைத்தே அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

“ருவாண்டாவிலுள்ள சொத்துக்களின் நியாயமான உரிமையாளர்கள் சட்டபூர்வமான வாரிசுகளின்றி மரணமடைந்தாலோ, அல்லது பல காரணங்களால் ருவாண்டாவிலிருந்து வெளியேறியவர்கள் நாட்டில் அந்தச் சொத்துக்களைப் பராமரிக்க சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட ஒருவரை நியமிக்காமலிருந்தாலோ அல்லது எந்தச் சொத்துக்களையாவது எவரேனும் சட்டவிரோதமாகத் தன்வசப்படுத்திக் கொண்டிருந்தாலோ அப்படியான அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் கைவிடப்பட்டதாகக் கருதப்பட்டு அவை அரசுடைமையாக்கப்படும்” என்கிறது அந்தச் சட்டம்.



இந்தச் சட்டத்தின்படி, கைவிடப்பட்ட சொத்துக்கள் அதன் சட்டபூர்வமான வாரிசுகளுக்குத் திரும்பும் வரை அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது அரசின் பொறுப்பாகும் என்றும் கூறுகிறது.

கிழக்கு ஆப்ரிக்க நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் அரசு செய்தது தவறு என்று கூறப்பட்டுள்ளது.

சரி இந்தத் தீர்ப்பை இலங்கைக்கு எப்படிப் பொருத்தி பார்ப்பது?

அடிப்படையில் இந்தப் பிரச்சனை, வழக்கு, தீர்ப்பு, பிரதிபலிப்பு, நீண்டகாலத் தாக்கம் ஆகியவை இனப்படுகொலைகளுடன் தொடர்புடையவை.

ருவாண்டாவில் நடைபெற்ற இனமோதல்கள் மற்றும் வரலாறு காணாத வகையில் நடைபெற்ற இனப்படுகொலை மிகவும் கொடூரமானவை. இவ்வளவுக்கும் மோதலில் ஈடுபட்ட ஹூட்டு மற்றும் டூட்ஸி மக்கள் மதம், மொழி, கலாச்சார ரீதியாக ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் மற்றும் இன மோதல்கள் ஆறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. போர் நடைபெற்ற காலத்தில் பலர் விரும்பியோ விரும்பாமலோ தாயகத்திலிருந்து வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்படி அவர்கள் வெளியேறிய போது நிலம், வீடு, வாகனம் போன்ற பலவற்றை விட்டுவிட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி நாட்டைவிட்டு வெளியேறினர்.




அப்படி அவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் பாதுகாப்பு படைகளாலும், இதர அமைப்புகளாலும் கையகப்படுத்தப்பட்டு தமது சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. பின்னர் அவை காலப் போக்கில் “அவர்கள் சொத்தாகியது”.

அந்தச் சொத்துக்களை அரசும் உரிமையாளர்கள் அல்லது அவர்களின் வாரிசுகளுக்குத் திருப்பியளிக்க முன்வரவில்லை அல்லது உரிமையாளர்கள் முயன்று தோல்வியுற்றார்கள்.

குறிப்பாகப் போர்க் காலத்திலும் அதற்கு பின்னரும் பாதுகாப்புப் படையினரின் பயன்பாட்டுக்காகக் கையகப்படுத்தப்பட்ட காணிகள், கட்டடங்கள் மற்றும் இதர சொத்துக்கள் இன்னும் முழுமையாக உரியவர்களிடம் கையளிக்கப்படவில்லை.

போர் முடிந்து பத்தாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் அந்த சொத்துக்களை அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தொடர்ந்து கேள்விக்குரியதாக இருந்தாலும் அதற்கான விடை மற்றும் காணப்படவில்லை.

ஒரு நபர் நாட்டில் இல்லை, அல்லது அந்தச் சொத்துக்களை அவர்களுடைய சட்டரீதியான வாரிசுகள் பராமரிக்கவில்லை என்று கூறி கையகப்படுத்தியதும், உரியவர்களிடம் அதை ஒப்படைக்காததுமே கிழக்கு ஆப்ரிக்க நீதிமன்ற தீர்ப்பின் அடிநாதம். அந்தத் தீர்ப்பின் அடிப்படைகள் இலங்கைக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

தனியார் சொத்துக்களை ஒரு அரசு தனது விருப்பப்படி கையகப்படுத்துவது தொடர்பிலான வழக்குகளில் இந்தத் தீர்ப்பு மேற்கோள் காட்டப்படலாம். ஏனெனில் இந்த விஷயத்தில் ருவாண்டாவுக்கும் இலங்கைக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன.

என்ன செய்ய முடியும்?

இலங்கையில் தனி நபர்களின் சொத்துக்கள் அரசால் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று தனி நபர்கள் கருதினால், அவர்கள் முறையாக அரசை அணுகி அதை விடுவிக்கும்படி கோரலாம். அவர்கள் கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் நீதிமன்றத்தை அணுகி தமக்கு நியாயம் வழங்கும்படி கோரலாம்.




அவ்வகையில் உள்நாட்டிலோ அல்லது பன்னாட்டு மன்றத்திலோ முறையிடும் போது கிழக்கு ஆப்ரிக்க நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பைச் சுட்டிக் காட்டலாம். அந்த வழக்கு மற்றும் தீர்ப்புக்கும் தமது வழக்குக்கும் பொருந்தும் என்று அவர்கள் எடுத்துரைக்கலாம்.

இதில் மிகவும் முக்கியமான ஒன்று சொத்து தொடர்பிலான ஆவணங்கள். அவை எந்தளவுக்கு பாதுகாப்பாக உள்ளன என்பதும் கவனிக்கப்பட வேண்டியது. அரசின் பயன்பாட்டுக்குக் காணி தேவை என்றால் அதை உரிய வகையில் ஆவணப்படுத்தி, உரியவர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்களுக்கு நியா-யமான இழப்பீட்டை அளித்த பிறகே அதை கையகப்படுத்த முடியும்.

இதையே கிழக்கு ஆப்ரிக்க நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. அதேவேளை குறிப்பிட்ட அந்தக் காணி அல்லது கட்டடமே அரசின் தேவைக்கு உகந்தது மாற்றுக் காணி அல்லது கட்டடம் ஏற்புடையதல்ல என்பதை நீதிமன்றத்தில் அரசு நிரூபிக்க வேண்டும்.

இலங்கை அரசு முதல் படியாக உரியவர்களிடம் சொத்தைக் கையளிக்கும் நடவடிக்கையை விரைவாகத் தொடங்க வேண்டும். அதற்கு நிர்வாக மற்றும் சட்டரீதியாக கால அவகாசம் தேவைப்படும் என்பதை அரசு நியாயப்படுத்தும். அதற்கு முன்னர் எந்நாளிலிருந்து குறிப்பிட்ட சொத்துக்கள் அரசின் பயன்பாடு அல்லது வேறு காரணங்களுக்காகக் கையகப்படுத்தப்பட்டதோ அதற்கான வாடகையை முறையாகக் கணக்கிட்டு வட்டியுடன் உரியவர்களுக்கு அளிக்க வேண்டும்.


இதையே ரூவாண்டாவின் யூனியர் டிரேட் செண்டர் தொடர்பான வழக்கில் கிழக்கு ஆப்ரிக்க நீதிமன்றம் கூறியுள்ளது. சொத்துக்களை திருப்பியளப்படுதுடன் அரசின் வசமிருந்து காலகட்டத்துக்கான வாடகை பாக்கியை 6% வட்டியுடன் அளிக்க வேண்டும் என்கிறது நீதிமன்றம்.

ஒரு அரசியல்வாதியாக இல்லாமல் நிர்வாகியாக அறியப்படும் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இதில் உரிய நடவடிக்கையை எடுத்து உரியவர்களிடம் சொத்துக்களைக் குறிப்பாக காணிகளை மீண்டும் கையளிப்பார் என்று நம்புவோம்.

அப்படிச் செய்ய அவர் முன்வந்தால் அது பன்னாட்டரங்கில் அவருக்கு ஒரு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுக்கும்.

# ஜெனிவா 2021ஐ எதிர் கொள்வதற்கான தமிழ்த் தயாரிப்பு?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



வரும் ஜெனிவா கூட்டத்தொடரை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் ஒரு பொது உடன்பாட்டை எட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு சுமந்திரன் ஒரு நகர்வை முன்னெடுத்து வருவதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் காலைக்கதிர் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இதன்படி சுமந்திரன் ஒரு கொன்செப்ட் பேப்பரை உருவாக்கி அதனை விக்னேஸ்வரனிடமும் கஜேந்திரகுமாரிடமும் பரிசீலனைக்கு வழங்கியிருப்பதாக அப்பத்திரிகை கூறியிருக்கிறது. அந்தக் பேப்பரில் என்ன இருக்கிறது என்பதனை பின்னர் பார்க்கலாம். ஆனால் இப்படி ஒரு பொது உடன்பாட்டை எட்டுவதற்கான தேவை சுமந்திரனுக்கு ஏன் ஏற்பட்டது?

பின்வருமாறு சந்தேகிக்கப்படுகிறது: முதலாவது காரணம், அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடரில் அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் வரலாம் என்று ஓர் எதிர்பார்ப்பின் பின்னணியில் அந்த நெருக்கடிகளை வெற்றிகரமாக கையாண்டு ஐநா மற்றும் மேற்கு நாடுகளின் உதவியோடு ஒரு புதிய தீர்மானத்தை நிறைவேற்ற கூட்டமைப்பு முயற்சிக்கிறது. இப்புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விவகாரங்கள் தொடர்பில் மூன்று கட்சிகளுக்கும் இடையே ஒரு பொது உடன்பாட்டை எட்ட வேண்டும் என்று கூட்டமைப்பு சிந்திக்கிறது.

இரண்டாவது காரணம், கொழும்பிலுள்ள சில மேற்கு நாடுகளின் தூதுவர்களுடன் சுமந்திரன் பேசியிருக்கிறார். அதன்படி வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் அரசாங்கத்துக்கு மேலும் கால அவகாசம் வழங்கலாமா என்று ஐநா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் சிந்திபதாகத் தெரிகிறது. சுமந்திரன் அக்கருத்தைப் பிரதிபலிக்கிறார். எனவே அக்கருத்துக்கு ஆதரவாக ஏனைய கட்சிகளை வளைக்க முயல்கிறார்.

மூன்றாவது காரணம், ஏற்கனவே மாவை யாழ்ப்பாணத்தில் கட்சிகளை ஒருங்கிணைத்து வைத்திருக்கிறார். அந்தக் கூட்டு இன்று வரையிலும் உடையவில்லை. எனினும் அந்தக்கூட்டை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்ற ஆசை மாவைக்குண்டு அதில் அவருக்கு மாகாண சபையை நோக்கிய உள்நோக்கங்கள் இருக்கக்கூடும். எனினும் சாத்தியமான ஒரு கூட்டைக் கட்டி எழுப்புவதே மாவை சிவஞானம் போன்றவர்களின் ஆசைசயாக தெரிகிறது.இந்நிலையில் மாவையின் கூட்டுக்குப் போட்டியாக ஒரு புதிய கூட்டை உருவாக்கி மாவையின் முயற்சிகளின் முக்கியத்துவத்தை குறைப்பதே சுமந்திரனின் நோக்கம் என்ற ஒரு சந்தேகம்.

இந்த மூன்று சந்தேகங்களையும் இனி விரிவாகப் பார்க்கலாம். அடுத்த ஜெனிவாக் கூட்டத் தொடரில் அரசாங்கம் நிலைமாறு கால நீதிக்கான ஜெனிவா தீர்மானத்தில் இருந்து விலகியதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த வேண்டியிருக்கும். ஏற்கனவே கடந்த ஆண்டு கூட்டத் தொடரில் அரசாங்கம் உத்தியோகபூர்வ முடிவை அறிவித்து விட்டது. ஆனால் அவ்வாறு அறிவித்த பின்னரும் கடந்த ஓராண்டு காலமாக நிலைமாறுகால நீதியின் கீழ் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய கட்டமைப்புக்களை கலைக்காமல் அப்படியே ராஜபக்சக்கள் தொடர்ந்தும் பேணி வருகிறார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் இழப்பீட்டு நீதிக்கான அலுவலகம் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான அலுவலகம் ஆகிய மூன்று கட்டமைப்புகளையும் அவர்கள் தொடர்ந்தும் பேணி வருகிறார்கள். மேற்படி அலுவலகங்கள் முன்னம் இயங்கிய இடத்தில் இப்பொழுது இயங்கவில்லை. அவை நீதி அமைச்சு இயங்கும் கட்டடத்துக்குள் கொண்டு வரப்பட்டு விட்டன.எனினும் அக்கட்டமைப்புகளுக்குரிய கொடுப்பனவுகள் இன்று வரையிலும் நிறுத்தப்படவில்லை.

அதிலும் முக்கியமாக சில வாரங்களுக்கு முன்பு காணாமல் ஆக்கப்பட்டவர்களுகான அலுவலகம் ஒரு முதல் நிலை அறிக்கையை வெளியிட்டது. அதில் இதுவரையிலும் தனக்குத் தரப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் 14315 பேர் காணாமல் போயிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 21053 முறைப்பாடுகள் இதுவரை கிடைத்திருப்பதாகவும் அந்த முறைப்பாடுகளை ஒழுங்கு முறையாக பரிசீலித்து இப்பொழுது அந்த முதல்நிலை அறிக்கையின்படி மொத்தம் 14315 காணாமல் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை தமிழ் ஊடகங்களில் பெருமளவுக்கு விவாதப் பொருளாக மாறவில்லை.

இந்த அறிக்கை வெளியிடப்பட்ட பின் நடந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இழப்பீட்டு நீதிக்கான அலுவலகத்துக்கு முன்னைய ஆண்டை விட அதிக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டதாக அறிவிக்கப்படும் ஆட்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் உள்ளதா? என்ற சந்தேகம் உண்டு.

எனவே மேற்கூறியவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அரசாங்கம் நிலைமாறுகால நீதிக்குரிய கட்டமைப்புக்களை அவை பலவீனமானவை என்ற போதிலும் அவற்றை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற போதிலும் தொடர்ந்தும் இயங்க விடுவதன் மூலம் வெளி உலகத்துக்கும் ஐநாவுக்கும் எப்படிப்பட்ட ஒரு செய்தியை கொடுக்க முயற்சிக்கின்றது?

நாங்கள் 30/1 தீர்மானத்தின் கீழ் பொறுப்புக் கூறத் தயாரில்லை. ஆனால் ராஜபக்சே பாணியிலான ஒரு பொறுப்புக்கூறும் பொறி முறையை உள்நாட்டு வரையறைகளுக்குள் முன்னெடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதே அந்தச் செய்தியா? மகிந்த ராஜபக்சவின் முதலாவது ஆட்சிக் காலத்தில் அவர் அப்படிப்பட்ட பொறிமுறைகளை உருவாக்கினார். கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவின் மூலம் அவர் பொறுப்புக் கூறும் பொறி முறை ஒன்றை முன்னெடுப்பதுப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்பினார். அதே பாணியில் இந்த முறை அவருடைய சகோதரரும் ஒரு கட்டமைப்பை ஒரு பொறி முறையை உருவாக்க யோசிக்கிறாரா?

ஆனால் 30/1 தீர்மானத்துக்கு ஐநா ஏற்கனவே இரண்டு தடவை கால அவகாசம் வழங்கி விட்டது. அதில் இரண்டாவது கால அவகாசம் வரும் மார்ச் மாதத்தோடு முடிகிறது. அது தொடர்பான எழுத்துமூல அறிக்கையை ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் வரும் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பார். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்களை

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



# ஓய்வு பெற்றவர்களின் நீதியும் ஈழத் தமிழர்களின் அரசியலும்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது நினைவுகளைத் தொகுத்து ஒரு நூலை எழுதியிருக்கிறார். அண்மையில் வெளியிடப்பட்ட இந்த நூலில் அவர் இலங்கைத் தீவில் இடம்பெற்றது ethnic slaughter அதாவது இன சங்காரம் என்று கூறியிருக்கிறார். ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் அவர் இனப்படுகொலை என்று அதை அழைத்திருப்பதாக்க கருதுவது தெரிகிறது. ஆனால் அது இனப்படுகொலை என்ற அரசியல் அடர்த்தி மிக்க ஒரு வார்த்தயை விட செறிவு குறைந்த வார்த்தைதான். சங்காரம் என்பது தொகையாக உயிர்களை அழிப்பது. அதன் வேர்ச்சொல் பழைய நோர்வீஜிய மொழியிலிருந்து வருகிறது. அதன் பொருள் இறைச்சிக்கடை அல்லது யுத்த களத்தில் தொகையாகப் பொது மக்களைக் கொல்வது என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் அரசியல் அகராதியில் இனப்படுகொலை என்ற வார்த்தை அதை விட அடர்த்தியான அர்த்தங்களைக் கொண்டது. எனவே இது விடயத்தில் இனப்படுகொலை என்ற முதல் நிலை சொல்லைப் பயன்படுத்தாமல் அதைவிட அரசியல் அடர்த்தி குறைந்த ஒரு சொல்லை ஒபாமா பயன்படுத்தியிருக்கிறார் இந்த சொற் தெரிவிற்குள்ளும் ஒரு செய்தி இருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது ஒபாமா உலகப் பேரரசு ஒன்றின் நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு தலைவராக இருந்தவர். அவருடைய காலத்தில்தான் 2009 மே வந்தது. அவருடைய காலத்தில்தான் போரில் ஈடுபட்ட மக்களை காப்பாற்றுவதற்கு ஒரு மேற்கு நாடு முயற்சித்தது என்று பொதுவாகக் கருதப்பட்டது. அவருடைய காலத்தில்தான் வணங்காமண் கப்பல் வரும் என்று அல்லது ஐ.நா வரும் என்று நம்பி போர்க்களத்தில் சிக்குண்டிருந்த ஈழத்தமிழர்கள் எதிர்பார்ப்போடு கடலைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆனால் எதுவும் வரவில்லை.

நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு பெரும் தலைவராக இருந்த காலகட்டத்தில் அந்த அநீதியைத் தடுக்காத ஒபாமா ஏன் இப்பொழுது அதை சுட்டிக்காட்ட வேண்டும்? அதிலும் குறிப்பாக பழியைப்பெருமளவுக்கு ஐநாவை நோக்கித் திருப்ப காரணம் என்ன? காரணம் மிகவும் எளிமையானது. அநீதி நடக்கும் பொழுது தான் அதிகாரத்தில் இருந்தது அவருக்கு குற்ற உணர்ச்சியைத் தருகிறது. தன்னுடைய ஆட்சிக் காலத்தில் அதைத் தடுக்க முடியவில்லை என்பது அவரைப் பொறுத்தவரை குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தக்கூடியது. எனவே குற்ற உணர்ச்சி காரணமாகத்தான் அவர் இப்பொழுது அதாவது ஓய்வு பெற்றபின்னாவது அந்த உண்மையை ஒப்புக் கொள்கிறார்.

அவர் அவ்வாறு தெரிவித்திருப்பது அதன் முதல் நிலை அர்த்தத்தில் ஈழத்தமிழர்களுக்கு சாதகமானது. ஆனால் அது ஒரு முன்னாள் அதிபரின் அபிப்பிராயம்தான். அதை ஒரு அரசியல் தீர்மானம் ஆக மாற்ற வேண்டும். அங்கேதான் ஈழத்தமிழர்கள் அரசியல் செய்ய வேண்டும்.

ஒபாமா மட்டுமல்ல இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த அமரர் ஜே.என்.டிக்சிற்றும் அவ்வாறு தெரிவித்திருக்கிறார். அவருடைய அசைன்மென்ட் கொழும்பு என்ற நூலில் அவர் ஓரிடத்தில் மிய குல்பா எனப்படும் ஒரு லத்தீன் வார்த்தையை பயன்படுத்தி இருக்கிறார். அது கிறீஸ்தவர்கள் பாவ மன்னிப்பில் கூறுவது.

டிக்சிட் கொழும்பில் இந்திய தூதுவராக இருந்தனர். விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இந்திய அமைதிகாக்கும் படைக்கும் இடையிலான மோதல் காலகட்டத்தில் அவர் அந்தப் பொறுப்பில் இருந்தார். ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் முடிவெடுக்கும் அதிகாரிகளுக்கு விவகாரத்தை தெளிவுபடுத்தும் பொறுப்பில் அவர் இருந்தார். ஆனால் ஓய்வு பெற்ற பின்னர் தான் அவர் மியா குல்பா என்று சொன்னார்.

அவரைப்போலவே மற்றொருவர் முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங். 2014ஆம் ஆண்டு அவர் வ்ர்லியிட்ட நூலில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். சிறிலங்காவின் அவலம் என்ற அத்தியாயத்தை அவர் பின்வருமாறு முடிக்கிறார். "மிகத் தொடக்கத்திலிருந்தே இலங்கை இனப்பிரச்சினை மிகத் தவறாகக் கையாளப்பட்டதுடன் அது முழு அளவிலான ஒரு தோல்வியாகவும் முடிவடைந்தது" இக்கருத்துக்கள் ஈழத் தமிழர்களுக்கு சாதகமானவை. அந்த நூல் வெளிவந்த காலகட்டத்தில் அதைக் குறித்து நான் ஒரு கட்டுரை எழுதினேன். "ஓய்வூதியர்கள் பெற்ற ஞானம்" என்று.

இப்பொழுது ஒபாமா கூறுகிறார் நடந்தது இன சங்காரம் என்று. மேற்கண்ட மூவரும் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்கள். ஆனால் அவர்களுடைய பதவிக் காலங்களில் இனப்பிரச்சினையை அவர்களால் தீர்க்க முடியவில்லை. நடப்பது அநீதி என்று தெரிந்திருந்தும் ஏன் அவர்களால் அதைத் தடுக்க முடியவில்லை?

விடுதலைப் புலிகளை விமர்சிப்பவர்கள் இது விடயத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டுவார்கள். ஈழத்தமிழர்களின் போராட்டம் நீதியானது என்றாலும் போராடிய விதம் அதன் நீதியை குறைத்து விட்டது என்றும் இதனால் ஈழத்தமிழர் விவகாரத்தை கையாள்வதில் வெளித் தரப்புக்களுக்கு வரையறைகள் இருந்தன என்றும். கடந்த 11 ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் இயக்கம் அரங்கில் இல்லை. எனினும் இனப்பிரச்சினையை ஏன் தீர்க்க முடியவில்லை?

எனவே இங்கு பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களின் போராட்டம் நீதியானதா இல்லையா என்பதல்ல. உலகப் பேரரசுகளும் பக்கத்து பேரரசும் அப்போராட்டத்தை குறித்து நீதி நியாயங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கவில்லை என்பதுதான். ஏனெனில் அரசியல் தீர்மானங்கள் நீதி நியாயங்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதில்லை. அதிகபட்சம் நலன்சார் நோக்கு நிலைகளில் இருந்தே எடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு பொருளாதாரம் ஆகிய இரண்டின் அடிப்படையிலும் அந்த முடிவுகள் பெரும்பாலும் எடுக்கப்படுகின்றன. எனவே ஒரு மக்கள் கூட்டம் தொடர்பான வெளியரசுகளின் முடிவுகள் நீதி நியாயத்தின் அடிப்படையிலானவையாக இருக்க வேண்டும் என்றில்லை. மாறாக அவை பெருமளவுக்கு நலன்சார் உறவுகளின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகின்றன. இதை ஈழத் தமிழர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தப் பூமியின் அச்சு நீதியின் மையத்தில் சுற்றவில்லை. ஈழத் தமிழர்களின் தலையிலும் சுற்றவில்லை. அரசியலில் நீதி நியாயங்களை விடவும் நலன்களே முக்கியம். உன்னதமான இலட்சியங்களுக்கும் நடைமுறைகளுக்கும் இடையே பாரதூரமான இடைவெளிகள் இருக்கும்.

ஒரு மக்கள் கூட்டம் நீதிக்காக போராடுகிறது என்பதோ அல்லது நீதியாகப் போராடுகிறது என்பதோ அந்தப் போராட்டத்தின் வெற்றியை தீர்மானிப்பதில்லை. மாறாக அந்தப் போராட்டம் பிராந்திய நலன்களுக்கு பொருத்தமானதா என்பதே அதன் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கிறது. ஒரு போராட்டத்தில் ஒரு மக்கள் கூட்டம் எவ்வளவு தியாகத்தைச் செய்கிறது என்பதும் எவ்வளவு வீரமாக போராடுகிறது என்பதும் அப்போராட்டத்தின் இறுதி வெற்றியை தீர்மானிப்பதில்லை. மாறாக அந்தப் போராட்டத்துக்கும் வெளித் தரப்புகளுக்கும் இடையில் இருக்கக்கூடிய நலன்சார் உறவுகளே இறுதி வெற்றியை தீர்மானிக்கின்றன.

அதாவது மேற்கண்டவற்றைத் தொகுத்தால் ஒரு விடயம் கூர்மையாக வெளிப்படுகிறது. அது என்னவெனில் ஈழத் தமிழர்களின் போராட்டம் நீதியானதா? அல்லது அதற்காக அவர்கள் நீதியாகப் போராடினார்களா? என்பவையெல்லாம் அப்போராட்டத்தில் இறுதி முடிவைத் தீர்மானிக்கவில்லை. மாறாக முழுக்க முழுக்க நலன்சார் உறவுகளே இதுவிடயத்தில் முடிவுகளை எடுக்கின்றன.

எனவே ஓய்வு பெற்றவர்களின் நீதி ஈழத் தமிழர்களுக்கு உற்சாகத்தை கொடுக்கலாம். ஆனால் ஓய்வு பெற்றவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அவர்கள் சார்ந்திருந்த அரசுக் கட்டமைப்பின் உத்தியோக பூர்வ கொள்கை முடிவுகளாக அரசியல் தீர்மானங்களாக மாற்றப்பட வேண்டும். புதிய அமெரிக்க அரசுத் தலைவர் ஜோ பைடன் ஒபாவாவின் வாரிசு. ஒபாமாவாவின் செல்வாக்கு அவரிலுண்டு. எனவே ஒபாமாவுக்கூடாக ஈழத் தமிழர்கள் தொடர்பான அமெரிக்காவின் உத்தியோக பூர்வ நிலைபாடுகளில் எப்படிச் செல்வாக்குச் செலுத்துவது என்று ஈழத்தமிழர்கள் சிந்திக்க வேண்டும். "ஒபாமாவுகான தமிழர் அமைப்பு" "ஜோ பைடனுகான தமிழர் அமைப்பு" போன்றவை சாதித்தவை என்ன?

டெல்லியில் போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு ஆதரவாக கனேடியப் பிரதமர் ஏன் கருத்துத் தெரிவித்தார்? விவசாயத்தின் மீதுள்ள காதலினாலா? இல்லை. இந்தியாவில் வேளாண் மசோதாவுக்கு எதிராகப் போராடும் விவசாயிகளில் அநேகர் சீக்கியர்கள். கனடாவில் பலமான ஒரு சீக்கியச் சமூகம் உண்டு. எனவே கனேடியப் பிரதமர் தனது சீக்கிய வாக்காளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். இதுவும் நலன்சார் அரசியல்தான்.

ஒரு அபிப்பிராயம் அல்லது நியாயம் அரசியல் தீர்மானமாக மாற்றப்படுவது என்றால் அதற்கு லோபி செய்ய வேண்டும். எப்படிப்பட்ட லோபி என்றால் அந்த சிறிய மக்கள் கூட்டத்தின் நலன்களும் வெளியரசுகளின் நலன்களும் எந்த ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்கின்றனவோ அப்பொதுப் புள்ளிகளை வைத்துப் பேரத்தை பேச வேண்டும். அப்படிப் பேரம் பேசினால்தான் சிறிய தேசிய இனங்களுக்கு மீட்சி கிடைக்கும். இந்த இடத்தில் ஒரு பொருத்தமான ஆபிரிக்க பழமொழியை கூற வேண்டும். "நீ நீதியின் பக்கம் நிற்கிறாய் என்பதற்காக உலகம் உன்னிடம் நீதியாக நடந்து கொள்ளும் என்று முடிவெடுத்து விடாதே ஏனென்றால் சிங்கத்தை நீ சாப்பிட மாட்டாய் என்பதற்காக சிங்கம் உன்னைச் சாப்பிடாமல் விடாது".

# ஜெனிவா 2021ஐ எதிர் கொள்வதற்கான தமிழ்த் தயாரிப்பு?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்காமல் பேணும் அரசாங்கம் நிச்சயமாக முற்றுமுழுதாக ஐநாவுக்கான பொறுப்புக் கூறும் கடப்பாட்டில் இருந்து விலகும் ஒரு முடிவை எடுக்கப் போவதில்லை என்று ஐ.நாவின் முப்பதின் கீழ் ஒன்று தீர்மானத்துக்கு இணை அனுசனை வழங்கிய நாடுகள் நம்புகின்றனவா?

ராஜபக்சாக்கள் தமது தனிச் சிங்கள வாக்காளர்களுக்கும் படைத்தரப்புக்கும் அச்சம் ஏற்படாத விதத்தில் ஒரு கட்டமைப்பை சிந்திக்கக் கூடும். அதற்குரிய ஒரு பொறி முறையை அவர்கள் சிந்திக்கக்கூடும். இந்தப் பொறிமுறையானது ராஜபக்ச பாணியிலான ஒரு பொறுப்புக் கூறும் பொறி முறையாக அமையலாம். அந்தப் பொறி முறைக்குத் தேவையான ஒரு புதிய தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்ற முயற்சிக்கலாம். அல்லது ஏற்கனவே உள்ள தீர்மானத்தில் ஏதும் திருத்தங்களைச் செய்ய யோசிக்கலாம். எல்லாவற்றுக்கும் வரும் மார்ச் வரை பொறுத்திருக்க வேண்டும்.

இந்த இடையீட்டுக்குள்தான் சுமந்திரன் ஜெனிவாவை எதிர்கொள்வதற்கான ஒரு கூட்டுத் தயாரிப்பு குறித்து சிந்திப்பதாக தெரிகிறது. இது விடயத்தில் கஜேந்திரகுமார் தமிழர்களின் விவகாரத்தை ஜெனிவாவுக்குள் முடக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக தெரிகிறது. விக்னேஸ்வரனும் ஜெனிவாவிற்கு வெளியே விவகாரத்தை கொண்டு போக வேண்டும் என்று கருதுவதாகத் தெரிகிறது. இந்நிலையில் திரும்பவும் ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு சாதகமான ஒரு சுதாகரிப்பைச் செய்வதற்கு கூட்டமைப்பு முயற்சிக்கின்றதா?

இது விடயத்தில் அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்கும் ஒரு நகர்வையே கஜேந்திரகுமார் ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது. விக்னேஸ்வரனும் ஜெனிவாவுக்கு வெளியே போக வேண்டும் என்று கருதுவதாகத் தெரிகிறது. எனவே ஜெனிவாவை ஒரு பொதுக் கட்டமைப்பின் மூலம் கையாள்வது என்ற விடயத்தில் மூன்று கட்சிகளையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைக்க மேலும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் என்றே தெரிகிறது.

இதை இந்த மூன்று கட்சியைச் சேர்ந்தவர்களும் தாங்களாக முன்வந்து செய்வார்கள் என்று தோன்றவில்லை. சுமந்திரனின் நகர்வு எனைய கட்சிகளால் சந்தேகத்தோடுதான் பார்க்கப்படும். தவிர அவருடைய கட்சிக்குள்ளேயே மாவை சிவஞானம் போன்றவர்கள் அது தாம் ஏற்கனவே உருவாக்கியிருக்கும் ஒரு கட்டமைப்புக்கு எதிரானதா என்று சந்தேகிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு.

எனவே இது விடயத்தில் அனுசரணை செய்யக்கூடிய ஒரு குழு அவசியம். தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் இருக்கக்கூடிய ஈடுபாடு உடையவர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இது தொடர்பில் ஒரு அனுசரணை செய்யும் கட்டமைப்பை உருவாக்கி இணைப்பு முயற்சிகளில் ஈடுபட்டால்தான் பயன் பொருத்தமான விளைவு ஏற்படும். இல்லையென்றால் இப்போது உள்ள கட்சிகளை ஒரு புள்ளியில் சந்திக்க வைப்பது கடினம்.

ஆனால் துயரம் என்னவென்றால் அவ்வாறு அனுசரணைப் பணிகளை முன்னெடுக்கக் கூடிய சக்திகள் அனைத்தும் ஏற்கனவே விக்னேஸ்வரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த ஐந்தாண்டுகளாக முயன்று தோற்றுப்போய் விட்டார்கள். அதனால் அவர்கள் மத்தியில் சலிப்பும் சோர்வும் காணப்படுகிறது என்பதே உண்மைநிலை. இந்நிலையில் கட்சிகளுக்கிடையே விவகார மையக் கூட்டுக்களை உருவாக்கப் போகும் அனுசரணையாளர்கள் யார்?

# விவசாயிகள் போராட்டத்தில் சீக்கிய மதகுரு தற்கொலை: ஹரியாணா முதல்வர் இரங்கல்



விவசாயிகள் போராட்டத்தின் நடுவே சீக்கிய மதகுரு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் தன்னைத்தானே சுட்டுக்கொண்ட சீக்கிய மதகுருவின் மரணம் குறித்து ஊடகங்கள் தெரிவிப்பதாவது:ஹரியாணா குருத்வாராவைச் சேர்ந்த சீக்கிய மத குரு, பாபா சாந்த் ராம் சிங் வயது 65, கர்னல் மாவட்டத்தின் நிசிங் பகுதியில் உள்ள சிங்ரா கிராமத்தைச் சேர்ந்தவர்.பஞ்சாப், ஹரியாணா மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்திற்கு ஹரியாணாவைச் சீக்கிய மதகுரு டெல்லியின் சிங்கு எல்லை அருகே நடந்த போராட்டத்தில் நேரில் வந்து தனது ஆதரவைத் தெரிவித்தார்.

பின்னர், சீக்கிய மதகுரு பாபா ராம்சிங் டெல்லி சோனிபட் சாலையில் குன்லி என்ற இடத்தில் போராட்ட இடம் அருகே அவர் தனது காரில் தன்னைத்தானே சுட்டுக் கொண்டார்.உடனடியாக அவர் பானிபட்டில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர். இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டுவருவதாக சோனிபட் போலீஸார் தெரிவித்தனர்.இதுகுறித்து போலீஸார் கூறுகையில், 'ராம் சிங், தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு அவரிடமிருந்து காவல்துறைக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் தற்கொலை செய்துகொண்ட இடத்திலிருந்து பாபா ராம் சிங் பஞ்சாபியில் ஒரு கையால் எழுதப்பட்ட குறிப்பை விட்டுச் சென்றுள்ளார். அதில் ''விவசாயிகளின் வலியைதாங்க முடியவில்லை'' என்று ராம்சிங் எழுதியுள்ளதாகவும், போலீஸார் தெரிவித்தனர்.

மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயப் போராட்டங்களுக்கு ஆதரவளித்த சீக்கிய மதகுரு பாபா ராம் சிங் தற்கொலை செய்து கொண்டமை குறித்து ஹரியாணா முதல்வர் மனோகர் லால் கட்டர் வருத்தம் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் தளத்தில் கூறுகையில், ''பாபா ராம் சிங் இறந்ததற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அவர் தனது வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு சேவை செய்தார், மற்றவர்களுக்காக மட்டுமே வாழ்ந்தார்'' என்று தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும் 15 நாட்களுக்கு ஒரு முறை கரோனா பரிசோதனை: சுகாதாரத்துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் பேட்டி

ஐஐடி சென்னையில் பயிலும் மாணவர்களுக்குக் கரோனா தொற்று பரவியுள்ளதைக் கண்டறிந்ததால், மாநிலம் முழுவதும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கும் 15 நாட்களுக்கு ஒரு முறை கரோனா தொற்றுப் பரிசோதனை செய்யப்படும் எனச் சுகாதாரத்துறை முதன்மைச் செயலர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் இன்று (17ம் தேதி) சுகாதாரத்துறை முதன்மைச் செயலர் டாக்டர். ராதாகிருஷ்ணன் ஆய்வுப் பணி மேற்கொண்டார்.



அரசு மருத்துவமனையில் உள்ள காது, மூக்கு தொண்டைப் பிரிவு, பிரசவ வார்டு, கேன்டீன்களில் ஆய்வு செய்தார். கேன்டீனில் மக்கள் கூட்டமாகவும், முகக்கவசம் அணியாமல் இருந்ததையும் பார்வையிட்ட ராதாகிருஷ்ணன், அனைவரும் முகக்கவசம் அணியவும், கட்டாயம் தனிமனித இடைவெளியைப் பின்பற்றிட வேண்டும் என்றும் மக்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், செய்தியாளர்களிடம் முதன்மைச் செயலர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது:''கரோனா தொற்றில் இருந்து மீண்டர்கள் குறித்து மூத்த மருத்துவர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் கரோனா தொற்று படிப்படியாகக் குறைந்து வருகிறது. தினமும் 75 ஆயிரம் பேருக்கு நடத்தப்படும் பரிசோதனையில், கரோனா தொற்று எண்ணிக்கை ஆயிரத்து 100 என்ற எண்ணிக்கையில் தான் உள்ளது.2 ஆயிரம் பேருக்குக் கரோனா தொற்றுப் பரிசோதனை செய்வதில், பத்து முதல் 20 பேருக்கு மட்டுமே கரோனா தொற்று இருப்பது உறுதியாகிறது.

சேலத்தில் இதுவரை 767 பேருக்குக் கரோனா தொற்றுக்குச் சிகிச்சை அளித்துவந்த நிலையில், தற்போது, 83 பேர் மட்டுமே சிகிச்சையில் உள்ளனர். மாநிலம் முழுவதும் கரோனா தொற்று உயிரிழப்பு ஒரு சதவீதமாக உள்ளது. கரோனா பாதிப்பு இரண்டு சதவீதமாக உள்ளது. இதனைப் பூஜ்ஜிய நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் விடுதிகள், கேன்டீன்கள், மேன்ஷன்கள், மெஸ்களில் மாணவ, மாணவியர்கள் கூட்டமாக இருக்கக்கூடாது என அறிவுறுத்தியுள்ளோம். மூடிய அறையில் 20க்கும் மேற்பட்டோர் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது. முகக்கவசம் அணிவதைக் கைவிடக்கூடாது.

தடுப்பூசி, பயன்பாட்டுக்கு வரும் வரை களப்பணியாளர்கள் உள்பட அனைவரும் கரோனா தொற்று விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும். சென்னை ஐஐடியில் மாணவர்களுக்குக் கரோனா தொற்று கண்டறியப்பட்டதை அடுத்து, இரண்டு பிளாக்கில் அனைவருக்கும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்திலும் கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இறுதியாண்டு மற்றும் முதுநிலை மாணவ, மாணவியர்கள் கல்லூரிகளுக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே, மாநிலம் முழுவதும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கும் 15 நாட்களுக்கு ஒருமுறை கரோனா தொற்றுப் பரிசோதனை செய்யப்படும். அதனால், மாணவர்கள் அச்சப்படத் தேவையில்லை. பல கல்லூரிகளில் வீட்டில் இருந்தே ஆன்லைன் மூலம் வகுப்புகள் எடுக்கப்படுகின்றன. அதனை மாணவர்கள் பின்பற்றலாம்.கரோனா தொற்றில் இருந்து மீண்டு வந்துள்ளவர்களுக்கு மனநல பாதிப்பு வந்து விடக்கூடாது என்பதற்காக அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மனநல நிபுணர்களைக் கொண்டு கவுன்சிலிங் வழங்கப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவமனைகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பதாகப் பொதுமக்கள் புகார் அளித்தால், உடனடியாக ஆய்வு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்''.

இவ்வாறு முதன்மைச் செயலர் ராதாகிருஷ்ணன் கூறினார்.இந்த ஆய்வுப் பணியில் டீன் பாலாஜிநாதன், கண்காணிப்பாளர் தனபால், சேலம் மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி நிறுவன இயக்குநர் பூங்கொடி மற்றும் மருத்துவக் கல்லூரித் துறைத் தலைவர்கள் சுமதி, சுரேஷ்கண்ணா, சம்பத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் அருகே ஜெயலலிதாவுக்கு கோயில்: வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஏற்பாடு

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு கட்டப்படும் கோயில் கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற உள்ளதாக வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தெரிவித்தார். அதிமுக ஜெயலலிதா பேரவை சார்பில், திருமங்கலம் அருகே டி.குன்னத்தூரில் ஜெயலலிதாவுக்கு கோயில் கட்டும் பணி நடந்து வருகிறது. இப்பணியை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நேற்று பார்வையிட்டார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம்



கூறியதாவது: அதிமுகவின் ஒன்றரைக் கோடி தொண்டர்கள், ஜெயலலிதாவை தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். அவர்கள் குடும்பத்குல தெய்வமாகக்கருதி வழிபட்டு வருகிறார்கள். இந்த கோயிலில் ஜெயலலிதா, எம்ஜிஆர் ஆகியோன் முழு உருவ வெண்கலச் சிலைகள் அமைக்கப்படும். அதுமட்டுமில்லாது, இந்தக் கோயிலில் அனைவரும் வழிபடும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோயில் திருப்பணிகள் விரைவில் நிறைவடைந்து கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது என்றார்.

# ஏப்.30க்குள் காலி செய்யாவிட்டால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை: கிண்டி ஆஸ்ரம் பள்ளி விவகாரத்தில் லதா ரஜினிகாந்துக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

சென்னை கிண்டியில் லதா ரஜினிகாந்த் நடத்தும் ஆஸ்ரம் பள்ளியைவரும் ஏப்.30ம் தேதிக்குள் காலிசெய்து நிலத்தை உரிமையாளர் களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கெடு விதித்துள்ள சென்னைஉயர் நீதிமன்றம், தவறினால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.நடிகர் ரஜினிகாந்தின் மனைவி லதா ரஜினிகாந்த் செயலாளராக பதவி வகிக்கும் ராகவேந்திரா கல்விச் சங்கம் சார்பில் சென்னை கிண்டியில் ஆஸ்ரம் என்ற தனியார் பள்ளி இயங்கி வருகிறது.

கிண்டியில் செயல்படும் ஆஸ்ரம் பள்ளி நிர்வாகத்துக்கும், அந்த நிலத்தின் உரிமையாளர்களான வெங்கடேஸ்வரலு, பூர்ணசந்திர ராவ் ஆகியோருக்கும் இடையே ரூ.1.99 கோடி வாடகை நிலுவைத் தொகை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டதால் கடந்த 2014ம் ஆண்டுஉயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் வாடகை பாக்கியை உரிமையாளர் களிடம் செலுத்தவும், 2020 ஏப்ரல்மாதத்துக்குள் அந்த பள்ளியை காலி செய்து நிலத்தை ஒப்படைக்கவும் பள்ளி நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது.

ஆனால், கரோனா பரவல் காரணமாக மேலும் ஓராண்டு கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் கோரி பள்ளி செயலாளரான லதா ரஜினிகாந்த், சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் மனு தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு மீதான விசாரணைநீதிபதி என்.சதீஷ்குமார் முன்பாகநடந்தது. இருதரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி, ''மனுதாரர் தனது ஆஸ்ரம் பள்ளியை வரும் 2021ஏப்ரல் மாதத்துக்குள் அந்த இடத்தில் இருந்து காலி செய்து கொடுக்க வேண்டும். இல்லையெனில் மனுதாரரான லதா ரஜினிகாந்த் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும். மேலும், கிண்டி ஆஸ்ரம்பள்ளிக்கு தற்போது இயங்கும் முகவரியில் 202122 கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையை நடத்தக் கூடாது'' எனராகவேந்திரா கல்வி சங்கத்துக்கு தடை விதித்து உத்தர விட்டுள்ளார்.

## BRAMPTON நகரவாசிகள் தங்கள் குளிர்கால பயணங்களை பாதுகாப்பாக திட்டமிட நகரத்தின் பனி ஒதுக்கும் பாரிய வாகணங்கள் (Plow Tracker) உதவுகிறது

குலிர்காலத்திற்கு தயாராவது என்பது கூட்டு முயற்சியாகும் மற்றும் ஒவ்வொரு வருடமும் சாலை மற்றும் தெருக்களில் தடையில்லாமல் வழியமைத்துக் கொடுக்க நகரநிர்வாகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. பனி அகற்றுதல் என வரும்போது, நமது அர்ப்பணிப்பு கொண்ட பொதுப்பணித்துறை, சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) அமைப்பு மற்றும் உப சட்டங்கள் அமலாக்கத்துறை ஆகியவையே நம் மனதில் தோன்றுகின்ற வி'யங்களாக இருக்கலாம் இருந்தபோதிலும் திரைக்குப் பின்னால் இருந்தபடி ஒன்று சேர்ந்து பணியாற்றுகின்ற பல துறைகளும் உள்ளன˙ இவை ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் அனைவருக்கும் இந்தக் குளிர்காலம் பாதுகாப்பானதாக இருக்க வைக்க தங்கள் பங்களிப்பைச் செய்கின்றனர்.

கடந்த ஆண்டு, நகர நிர்வாகம் தனது ப்ளோ ட்ராக்கரை www.brampton.ca/snow எனும் வலைப்பக்கத்தில் அறிமுகப்படுத்தியது, இது பொதுப்பணித்துறை, டிஜிட்டல் இன்னொவேஷன் (Digital Innovation) மற்றும் ஐடி (IT) மற்றும் சர்வீஸ் பிராம்ப்டன் (Service Brampton) ஆகியவற்றின் கூட்டுமுயற்சியாகும். எந்தெந்த சாலைகள் மற்றும் நடைபாதைகள் பணிக்குழுக்களால் எந்த நிஜமான நேரத்தில் அகற்றப்பட்டுள்ளன என்பதைப் பார்க்க குடியிருப்பாளர்களுக்கு ப்ளோ டிராக்கர் உதவுகிறது. இந்த ஆண்டின் புதிய விஷயமாக, ப்ளோ டிராக்கரை 311 மொபைல் செயலியிலும் காணலாம், இது கூகிள் பிளே அல்லது ஆப் ஸ்டோரில் கிடைக்கிறது. இந்த கருவியைப் பயன்படுத்தி, குடியிருப்பாளர்கள் பனிப்பொழிவு பராமரிப்பு பற்றிய முன்னேற்றம், எந்த சாலைகளுக்கு முன்னுரிமைகள் கொடுக்கப்படுகிறது எனவும் ஒரு ப்ளோ இயந்திரம் அவர்களுக்கு அருகாமையில் இருக்கிறதா எனவும் சரிபார்க்கலாம்.

ப்ராம்ப்ட்டன் நகரில் பனிப்பொழிவு பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/snow மேலும் உங்கள் கைபேசியில் 311 செயலியை Google Play அல்லது App Store இல் இருந்து பதிவிறக்கிக் கொள்ளவும்.

## வாழ்த்துகிறேன்!



கனடாக் குளிரின் சாயலினைக்
காட்டிய நுவரெலி யாமண்ணில்
அனைவர் மனதிலும் இடம்பிடித்த
அன்பன் பத்ம நாதன்தனை
மனதிற் கேற்ற நண்பனென
மகிழ்வுடன் பெற்றிடும்
வாய்ப்படைந்தேன்.
தினமலர் போன்றதன் சிந்தனையால்
செய்திடும் சேவைகள் தொடரட்டும்!
ஆண்டு எழுபத் தேழுதனை
அடையும் இனிய நண்பரிவர்
நீண்ட காலம் அறிந்தநண்பர்!
நிறைந்த அற்வைப் பெற்றஅன்பர்!!
யாண்டும் இவர்பணி தொடர்வதற்கும்
நற்பொருள் கண்டு உவப்பதற்கும்
வேண்டும் நலத்துடன் வாழ்கவென
விருப்புடன் அவரை வாழ்த்துகிறேன்!!
சிந்தனைப் பூக்கள் நூல்தந்து
சிந்தனைப் பூப்பத் மநாதனென
சந்ததம் யாவரும் அழைத்திடவே
சாதனை படைத்த ஓர்அறிஞர்
வந்தனை செய்தவர் வேவையது
வரலாற் றோடு இணைகவென
சிந்தையில் எண்ணி வாழ்த்துகிறேன்!
சேவையும் தொடர வேண்டுகிறேன்!!

**நண்பன், சபா. அருள்சுப்பிரமணியம். M.A.**

# ANNOUNCEMENT:

## The Sri Lankan Consul General's Office in Toronto

The Consul General's Office in Toronto wishes to inform Sri Lankan pensioners that Life/Residence Certificates for 2021 are now accepted for attestation by the Consulate until 31 March 2021.

Since, the Consul General's Office has to strictly follow the Ontario health guidelines with regard to COVID-19, and restrictions, all pensioners are kindly requested to adhere to the following instructions;

1. Duly fill the Life/Residence Certificates 2021 and place your signature at category 03 ( front page down) and the Declaration category on the reverse side of the form.
2. With duly filled form attach copies of the following
   - Only the photo page of your valid Sri Lankan or Canadian passport.
   - Pension card, and
   - A self addressed stamped envelope in order to send you the attested copy
3. You can only drop off the form with the attachments in the special box at the Consul General's Office or send by post.

If you wish to send by post please get your doctors attestation with his/her names stamp on the Certification category of the reverse side of the form. In order to avoid Covid-19 risk, specially disabled, medically, physically challenged and seniors are kindly requested to refrain from visiting our Office and instead send their forms with doctors attestation post with self addressed stamped envelope.

4. Due to Covid-19 risk, entrance to the building is restricted and facility is not provided to fill the form at the Office. No waiting will be available until Ontario Covid-19 restrictions are eased/lifted. Therefore, please fill your forms at home.
5. Upon receipt of your form, this Office will attest and forward the originals to the Pensions Department and send your copy to you in the self addressed envelope within 10 days.
6. We appreciate your understanding and cooperation and wish you good health.

Visit our website at www.torontoslcg.org




# கனடாவிலிருந்து இலங்கை, இந்தியா செல்வதற்கு வேகமான இணைப்புச் சேவையை இணைந்து வழங்குகின்றன Air Canada மற்றும் Qatar Airways விமான சேவை நிறுவனங்கள்

# Air Canada and Qatar Airways expand their relationship, in launching Air Canada's non-stop service between Toronto and Doha

MONTREAL, Dec. 16, 2020 - Air Canada announced today the start of a strategic cooperation agreement with Qatar Airways allowing both airlines to expand their relationship, in conjunction with the launch of Air Canada's non-stop service between Toronto and Doha. This new agreement will provide customers access to a multitude of connections across the Middle East, Indian subcontinent and Southeast Asia, through Qatar Airways' Doha hub.

"I am delighted to strengthen our relationship with Qatar Airways, one of the world's best airlines, which will allow Air Canada to better respond to shifting demand trends. As Air Canada rebuilds its global network, we are strategically developing new routes and pivoting towards markets that cater to Canada's growing multicultural population. As more of our customers resume international travel next year, this enhanced agreement will allow Canadians more convenient options to visit family and friends, as well as open-up exciting new destinations. I am especially grateful to my good friend, H.E. Akbar Al Baker, for the warm welcome he has extended Air Canada in Doha," said Calin Rovinescu, President and Chief Executive Officer of Air Canada.




"I am extremely delighted with this strong relationship that Qatar Airways has with Air Canada under the pioneering leadership of my friend, Calin Rovinescu who has put Air Canada's strong brand on the world aviation map. Air Canada, one of the most successful airlines in North America, will add huge value to Qatar Airways' expanding network. Canada is a strategically important market for Qatar Airways, and this service will complement our existing four weekly service to Montreal and provide our travellers with additional options when planning travel to and from Canada. We look forward to harnessing our complementary strengths to increase choices for our thousands of passengers and enable smooth connectivity to a significant number of new destinations – particularly throughout Africa, Asia and the Middle East," said Qatar Airways Group Chief Executive, His Excellency Mr. Akbar Al Baker.

Air Canada operated its first non-stop flight between Toronto and Doha on December 15. This route will operate three times weekly onboard the carrier's state-of-the-art flagship Boeing 787-9 Dreamliner aircraft with 298 seats featuring a choice of Signature, Premium Economy and Economy services.




Air Canada's flights are timed to optimize connections through both Air Canada's Toronto global hub as well as Qatar's Doha hub. Seats are available for sale now through all booking channels including aircanada.com, the Air Canada App and travel agents.

Customers can collect and redeem Aeroplan points through Canada's leading loyalty program when travelling with Air Canada and eligible customers have access to priority check-in, Maple Leaf Lounges, priority boarding and other benefits.

Flight schedule from Toronto-Doha:

| Route | Flight # | Days operating | Departure Time | Arrival Time | Additional Info |
|---|---|---|---|---|---|
| YYZ-DOH | AC058 | Tue, Thur, Sat | 20:00 | 16:30 (+1 day) | Begins Dec. 15 B787-9 aircraft |
| DOH-YYZ | AC059 | Mon, Thur, Sat | 09:00 | 15:25 | Begins Dec. 18 B787-9 aircraft |

Customers travelling are advised to check applicable websites including those of their final destination and the Government of Canada website to review any entry document or quarantine requirements, which may evolve and change without notice.

# திரிஷா நடித்துள்ள படம் 'ராங்கி'

லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் தயாரிப்பில் நடிகை திரிஷா நடித்துள்ள படம் "ராங்கி". இயக்குனர் ஏர்.ஆர்.முருகதாஸ் இப்படத்தின் கதையினை எழுதியுள்ளார். இப்படத்தினை இயக்கி உள்ளார் இயக்குனர் ஆ. சரவணன். இப்படத்திற்கு இசை அமைத்துள்ளார் இசையமைப்பாளர் ஊ. சத்யா.

இத்திரைப்படத்தின் first single track "பனித்துளி விழுவதால் அனையாது தீபம்" பாடலை கபிலன் எழுதியுள்ளார், பிரபல பாடகி சின்மயி பாடியுள்ளார்.

நடிகர் சிவகார்த்திகேயன் இப்பாடலை இன்று மாலை 5.30 மணிக்கு தனது Twitter ல் வெளியிட்டார்.

https://youtu.be/RZMi6ANmhek

# இயக்குநர் வெற்றி மாறன் இயக்கிய "ஓர் இரவு" பகுதி வெளியிடப்பட்டது



Netflix நிறுவனத்தின் சமீபத்திய தமிழ் ஆந்தாலஜி திரைப்படமான "பாவக்கதைகள்" படத்தினை தமிழின் விருதுகள் வென்ற இயக்குநர்களான சுதா கொங்குரா, விக்னேஷ் சிவன், கௌதம் மேனன், வெற்றிமாறன் ஆகியோர் இயக்கியுள்ளனர். காதல், அந்தஸ்து, கௌரவம் ஆகியவை நம் உறவுகளில் ஏற்படுத்தும் மாற்றங்களை நான்கு அழகான கதைகளின் வழியே சொல்கிறது இப்படம். தமிழின் திறன்மிகு இயக்குநரான வெற்றிமாறன் இயக்கிய "ஓர் இரவு" சுமதி எனும் இளம்பெண் கர்ப்பமாக இருப்பதை, அவளது குடும்பம் அறிந்த பிறகு, அவள் குடும்பத்தினருடன் அவளுக்கு ஏற்படும் சிக்கல்களை, போராட்டத்தை சொல்லும் கதையாகும். அவளது தந்தை, அவளை ஏற்று கொண்டு, குழந்தையை குளிப்பாட்டும் சடங்கை நடத்த, அவளை வீட்டிற்கு கூட்டி வருகிறார். ஆனால் வீட்டில் நடக்கும் சம்பவம் அவளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. "ஓர் இரவு" படம் குறித்து இயக்குநர் வெற்றிமாறன் கூறியதாவது.

ஒரு தந்தைக்கும், மகளுக்குமான எளிய உறவு, வாழ்வின் பயணத்தில் எப்படி தடம் மாறுகிறது என்பதே கதை. எனது உள்ளுணர்வு சொல்ல விரும்பியது, கௌரவம் எனும் பெயரில் சமூககத்தில் குடும்ப அங்கம் ஒருவர் மீது ஒருவர் எத்தனை பெரிய வலியை உண்டாக்குகிறார்கள் என்பதே. "ஓர் இரவு" நம் சமூகத்தில் தற்போதும் நிலவிக் கொண்டிருக்கும் மூடத்தனத்தை, ஞாபகப்படுத்தும். அது நம் இதயத்தை சுக்குநூறாக்கி, வெட்கப்படவைக்கும் என்றார்.

**மக்கள் தொடர்பு: டி.ஒன்.**

# நடிகர்கள் ஸ்ரீகாந்த், வெற்றி ஆகியோர் இணைந்து நடிக்கும் "தீங்கிரை" திரைப்படம்

சஹானா ஸ்டுடியோஸ் சார்பில் ஏ.கே.குமார் தயாரிக்கும் புதிய திரைப்படம் தீங்கிரை. நாயகன் ஸ்ரீகாந்த்தும், 8 தோட்டாக்கள் படம் மூலம் மிகவும் பிரபலமான நடிகர் வெற்றியும் முதல் முறையாக இணைந்து நடிக்கிறார்கள். நாயகியாக அபூர்வா ராவ் நடிக்கிறார்.

மேலும் முக்கிய கதாபாத்திரத்தில் நிழல்கள் ரவி நடிக்கிறார். இத்திரைப்படத்தை அறிமுக இயக்குநர் பிரகாஷ் ராகவதாஸ் இயக்குகிறார். சூழ்நிலை சிலரை இரையாக்கும். அதில் வெகுசில தருணங்களில் அந்த இரையே வேட்டையாடத் துவங்கி தீங்கு செய்யும் செயலே.. தீங்கிரை. சைக்கோ கிரைம் திரில்லர் ஜானரில் கொரியன் படங்களுக்கு கொஞ்சமும் சளைக்காத வித்தியாசமான கதைக்களத்துடன் விறுவிறுப்பான திரைக்கதையுடன் இப்படம் உருவாக இருக்கிறது. இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பரபரப்பாக மிகுந்த பொருட்செலவில் படமாக இருக்கிறது. பிரகாஷ் நிக்கி இசையமைக்கும் இந்த படத்திற்கு கிரண் கௌசிக் ஒளிப்பதிவு செய்கிறார். மணிகுமரன் சங்கரா படத்தொகுப்பை கவனிக்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி பிரகாஷ் ராகவதாஸ் இயக்குகிறார்.

**மக்கள் தொடர்பு: குமரேசன்.**



# சசிகுமார் நடிப்பில் அனிஸ் இயக்கும் "பகைவனுக்கு அருள்வாய்"



கூர்கா படத்தை தயாரித்த 4 Monkeys Studio தயாரிப்பு நிறுவனம் தற்போது எதார்த்த நடிகர் ஆ. சசிகுமார் நடிக்கும் புதிய படத்தை பிரம்மாண்டமாக தயாரிக்கின்றது.

"பகைவனுக்கு அருள்வாய்" எனப்பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை திருமணம் எனும் நிக்காஹ் படத்தை இயக்கிய அனிஸ் இயக்குகிறார். கதையின் நாயகனாக ஆ. சசிகுமார் நடிக்க, நாயகிகளாக வாணி போஜன், பிந்து மாதவி நடிக்கின்றனர். மேலும் நடிகர்கள் நாசர், சதிஷ் நிஷ்நஷம், ஜெயபிரகாஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். தொழில் நுட்ப கலைஞர்கள் விவரம்: இசை - ஜிப்ரான், ஒளிப்பதிவு கார்த்திக் கே தில்லை, படத்தொகுப்பு மு. காசி விஸ்வநாதன், கலை விஜய் தென்னரசு, நடனம் தீனா, சண்டைப்பயற்சி ஆக்ஷென் நூர், மக்கள் தொடர்பு சதிஷ் (AIM) இன்று பூஜையுடன் இப்படத்தின் படப்பிடிப்பு இனிதே துவங்கியது.




# கனடா உதயன் வாசகர் வட்டம் நடத்தும் 2020ம் ஆண்டிற்கு விடைகொடுக்கும் இணையவழிக் கவியரங்கம்

**ஏழு கவிஞர்கள் பல நாடுகளிலிருந்து கலந்து கொள்கின்றார்கள்**

கவியரங்கத் தலைப்பு:- எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே?


கணபதி ரவீந்திரன் (கனடா)


அருட்கவி ஞான கணேசன் (கனடா)


அ. தமிழரசி (தமிழ்நாடு)


மகேந்திரன் பெரியசாமி (அமெரிக்கா)


பிரவீணா (சுவிஸ்)


கோவிலூர் செல்வராஜா (இங்கிலாந்து)


ஜவாத் மரைக்கார் (இலங்கை)

**காலம் 26-12-2020 சனிக்கிழமை**

கனடா, அமெரிக்கா நேரம்:- காலை 9.00 மணி
இலங்கை, இந்திய நேரம்:- இரவு 7.30 மணி
இலண்டன் நேரம்:- மாலை 2.00 மணி
ஐரோப்பிய நேரம்:- மாலை 3.00 மணி

**Join Zoom Meeting**

https://us02web.zoom.us/j/87143269785?pwd=QlJ0LzIrd0lJUkRabHVsQk41dzRWZz09

**Meeting ID: 871 4326 9785**
**Passcode: 863268**

மேலதிக விபரங்களிற்கு:-1416 732 1608

---

tdsb Virtual Schools | Toronto District School Board | IN-PERSON LEARNING

# ஆரம்பப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் குடும்பங்களுக்கான அறிவித்தல்

ஆரம்ப பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் குடும்பங்களுக்கு ஒரு கணக்கெடுப்பு படிவம் அனுப்பட்டுள்ளது. அதில் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகளில் நேரடியாகக் கற்றல் முறையிலிருந்து இணைய வழி ஊடாக கற்கும் முறைக்கு மாற்றுவதா அல்லது இணைய வழி ஊடாக கற்கும் முறையிலிருந்து பாடசாலைகளில் நேரடியாகக் கற்றல் முறைக்கு மாற்றுவதா தங்கள் விருப்பம் என்று கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கணக்கெடுப்பானது மின்னஞ்சல் மூலமாக பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தாங்கள் மேற்படி கணக்கெடுப்புப் படிவத்தை இதுவரை பெறாவிட்டால் அல்லது உங்களிடத்தில் மின்னஞ்சல் ஒன்று இல்லாவிட்டால் தயவுசெய்து 2021 ஜனவரி 5ம் திகதிக்கு முன்பாக www.tdsb.on.ca என்னும் இணையத்தளத்திற்குச் சென்று உங்கள் விருப்பத்தை பதிவு செய்யவும்

# பண்பாடு · மொழி · வரலாறு



## ஒன்ராரியோ மாணவர்களை நாம் ஆயத்தப்படுத்துகின்றோம்

**அவர்கள் உலகின் பிரஜைகளாக வருவதற்குரிய பாதையில்.**

தூர இருந்து கற்றல்-வீட்டிலிருந்து கற்றல் ஆகியவை இணையவழியாக கல்விச்சபை ஊடாக வழங்கப்படுகின்றது. 2.5 மணித்தியாலங்களை, ஒரு வாரத்தில், நேரடியாக முகம் பார்த்தும் சுதந்திரமாகவும் பயிலும் சந்தர்ப்பம்




TORONTO EDUCATION WORKERS

**தூர இருந்து கற்கும் திட்டத்திற்காக இன்றே பதிவு செய்யுங்கள்**

**OntarioOnlineLearning.ca**

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# மரண அறிவித்தல்



மலர்வு:
15-12-1925

மறைவு:
15-12-2020

## திருமதி இரத்தினம் கணபதிப்பிள்ளை

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி காளிகோவிலடியைப் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கணபதிப்பிள்ளை அவர்கள் 15-12-2020 செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி(புத்தூர்) அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்களின் அன்புத் துணைவியும், ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி, யோகேந்திரன், இராஜேந்திரன், புவனேந்திரன், விமலேஸ்வரி, அகிலேஸ்வரி, விமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், தெய்வானைப்பிள்ளை, இராசம்மா மற்றும் அழகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னுத்துரை, நாகம்மா ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரநாதன், கணபதிப்பிள்ளை, கதிர்காமநாதன் மற்றும் மல்லிகாதேவி, சங்கரி, சுமதி, பிறேமராஜன், கனகராசா, காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபு, தமிழ்ச்செல்வி, உமாசெல்வன், காயத்திரி, கஜன்தினி, கமலினி, காலஞ்சென்ற நித்தியா, நிரோஷன், ஹிந்துஜன், பிரணவன், பிரதாபன், நிதாரன், சியாமி, பிரசாத், சஞ்ஜீவன், பைரவி, சௌத்ரி, நிதர்சனா, நிவேதிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும், அஞ்சனா, ஐங்கரன், பரத், சுருதி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 17-12-2020 நேற்று வியாழக்கிழமை அன்று பி.ப 01:00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெற்றது

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு

ராஜேஸ்வரி வல்லிபுரநாதன் - மகள்: +61432529173, புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை - மகள்: +94762172498,
யோகேஸ்வரி கதிர்காமநாதன் - மகள்: +33179642168, யோகேந்திரன் - மகன்: +4915750460045,
இராஜேந்திரன் - மகன்: +16472803394, புவனேந்திரன் - மகன்: +447912351153,
விமலேஸ்வரி பிறேமராஜன் - மகள்: +94773760575, அகிலேஸ்வரி கனகராசா - மகள்: +14165715012,
விமலேந்திரன் - மகன்: +33627797356

சிறுகதை

# நில்!

- லோகேந்திரலிங்கம் (கனடா)

**கோ**டைவிலகி இலையுதிர் காலம் தோன்றவே, அதனை வரவேற்கவேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்பட்டிருந்தார்கள், வீதியின் இருமருங்கும் வளர்ந்திருந்த மரங்களிலிருந்து விழுந்த இலைகள் காற்றின் வீச்சுக்கு அள்ளுப்பட்டுப் போக, எஞ்சியவை கரைக்கு வந்து ஒதுங்கிய மீன் குஞ்சுகளைப் போல தரையெங்கும் ஊசலாடிக்கொண்டிருந்தன.

சற்று குளிரான கால நிலை என்பதால் வெளியில் நடந்து செல்பவர்கள் அரைக்குளிரைத் தாங்கக்கூடிய ஜாக்கட்களை அணிந்து சென்றார்கள். நகரசபை சுத்திகரிப்பு லாரி ஒன்று, ஒரு வீட்டின் முன்பாக வைக்கப்பட்டிருந்த "பிளாஸ்ரிக்டைகூடை" ஒன்றில் நிறைந்து வழிந்த குப்பைகளை தனது இயந்திரக் கைகளால் தூக்கி பக்குவமாக உள்ளே வீசியது.

வாகனத்தைச் மெதுவாகச் செலுத்தியபடி வீதியால் சென்று கொண்டிருந்த நேசன் ஆரம்ப பாடசாலை அமைந்திருக்கும் சந்தியைக் கடப்பதற்கு முன்பாக சிவப்பு நிற வீதிச் "சிக்னல்" ஒளிர்ந்தது. அதனால் தனது நிசானை "பிறேக்" போட்டு நிறுத்திக் கொண்டு வலப் புறமாகப் பார்வையைச் செலுத்தினான்.

சில விநாடிகள் அவனது கைகளுக்கும் கால்களுக்கும் ஓய்வு கிடைத்தன. ஆனால் மனம் மட்டும் வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது.. நோய்த் தொற்று தொடர்பான பயம் நேசனையும் பற்றியிருந்தது உண்மைதான்.

அந்தப் பாடசாலைக்குத் தான் நேசனின் இரண்டு பெண் பிள்ளைகளும் சென்று வருகின்றார்கள். வாரத்தில் ஐந்து நாட்களும் இங்கு வந்து அவர்களை வீட்டுக்கு அழைத்துப் போகும் பொறுப்பும் அவனுக்கு இருந்தது.




சாதாரண நாட்கள் என்றால் இந்த நேரத்தில் பெற்றோர் அல்லது உறவினர்கள் கூடி நின்று ஒருவர் இருவராக உரையாடிக் கொண்டிருப்பார்கள். ஆசிரியர்கள் சிலர் வெளியே வந்து வெளியில் விளையாடும் பிள்ளைகளைக் கவனிக்கும் பணியைச் செய்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் இன்று நிலைமை அப்படியில்லை. உலகத்தையே கலக்கி நிற்கும் "கொரோனா" இப்போது அவர்களில் பலரை வீட்டிலிருந்து கற்கவும் கற்பிக்கவும் கட்டாயப்படுத்திவிட்டது.

பாடசாலைக்கு வரும் பெற்றோர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. ஆனாலும் அரசாங்கத்தின் ஏற்பாட்டின்படி, விருப்பமுள்ள மாணவர்கள் பாடசாலைக்கு நேரடியாக சமூகமளித்து. தமது கற்றலை தொடரலாம் என்ற ஒழுங்கின் பிரகாரம், அந்தப் பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டிருந்தது. அதன் அறிகுறியாக மாணவர்களும் ஆசிரியர்கள் சிலரும் வெளியே மைதானத்தில் தேகப்பயிற்சி செய்த வண்ணம் நின்றார்கள்.

நேசனின் வாகனத்தின் பின்னால் நின்ற கார்ச் சாரதி ஒங்கி எழுப்பிய "ஹார்ன்" சத்தத்தால் பாடசாலைப் பக்கமிருந்த பார்வையை வீதிச் சிக்னல் பக்கம் திருப்பினான். எதிரே சிவப்பிவிருந்து பச்சைக்குத் திரும்பியிருந்த "சிக்னல்" விளக்கு நேசனைப் பார்த்துச் சிரித்தது.

பின்னால் வாகனச் சாரதிக்கு கைகளால் சைகை காட்டி மன்னிப்புக் கேட்டுவிட்டு தனது வாகனத்தை மீண்டும் செலுத்தத் தொடங்கினான்.

சற்றுத் தூரம் கடந்த பின்னர் தான் அவனுக்கு "ஒன்றை மறந்துவிட்டாயே" என்று மனம் சொல்லியது.

கடந்து வந்த பாடசாலைச் சந்தியில் மஞ்சள் நிறத்திலான சீருடை அணிந்தபடி தனது பணியைச் செய்து கொண்டிருந்த அந்த வீதிப் பாதுகாப்புப் பெண்ணான ஜேனிக்கு, வழமை போல கையசைக்க மறந்து விட்டோமே என்று கவலைப்பட்டான்.

பாடசாலையில் கற்றுவரும் பிள்ளைகளை, அவர்கள் வீதியைக் கடந்து செல்லும் போது வேகமாகச் செல்லும் வாகனங்களிடமிருந்து "பாதுகாக்கும்" பணியைத் தான் ஜெனி ஏற்றிருந்தாள். ஆனாலும் பெற்றோர்கள் வீதியைக் கடந்து செல்லும் போதும் கூட தனது கவனத்தைச் செலுத்தும் அந்தப் பெண்ணின் கடமையுணர்வு நேசனைக் கவர்ந்திருந்தது.

அதற்காகவே அவன் பாடசாலை செல்லும் போதெல்லாம் அவளருகில் சென்று சுகம் விசாரிப்பதும் வருடத்தில் ஒரு நாள் வரும் "கிறிஸ்மஸ்" விடுமுறைக்கு முன் வரும் கடைசி பாடசாலை நாளில் "கிவ்ட் கார்ட்" ஒன்றை வாங்கி பிள்ளைகளின் கரங்களால் அவளுக்கு வழங்குவதையும், வழக்கமாகக் கொண்டிருந்தான் நேசன்.

சரியாக நான்கு மாதங்களுக்குப் பின்னர் முதன் முதலாக அவளை பார்க்க நேர்ந்தும், வழமையாக செய்யும் ஒன்றை தவறவிட்டது நேசனுக்கு சற்று கவலையாக இருந்தது.

"சரி திரும்பி வீட்டுக்குப் போகும் போது வாகனத்தை நிறுத்தி கதைத்து விட்டுப் போகலாம்" என்று தன்னைக் தேற்றிக்கொண்டான்.

பின்னால் வந்து கொண்டிருந்த கார்ச் சாரதி மீண்டும் அவனை விடுவதாக இல்லை. மிகவும் வேகமாக நேசனின் வாகனத்தை "ஓவர்டேக்" செய்தபடி அவனுக்கு "நடுவிரலை" க் காட்டிவிட்ட திருப்தியோடு சென்று மறைந்தான்.

சாதாரண நாட்களாக இருந்திருந்தால், நேசன் அந்த சாரதியை விட்டிருக்க மாட்டான். இவ்வாறான மரியாதைக் குறைவான காரியங்களைச் செய்பவர்கள் அல்லது தூசண வார்த்தைகளால் திட்டிச் செல்கின்றவர்கள் போன்றவர்களை பல தடவைகள் துரத்திச் சென்றிருக்கின்றான். பலர் வேகமாக ஓடி மறைந்திடுவிடுவார்கள். சிலர் இன்னுமொரு தடவை முன்னர் செய்த "அதையே" செய்து விட்டுப் போவார்கள். அதற்குள் நேசனுக்கு "பொத்துக் கொண்டு வந்த கோபம்" மறைந்து விடும்.

ஆனால் இன்று அவன் அவ்வாறு அந்த வாகனத்தை துரத்திக் கொண்டு போகவில்லை.

உலகமே "ஆட்டம்" கண்டுவிட்டது. மனதில் ஒரு பயம். எதிர்காலம் எப்படியிருக்கப்போகின்றது. குடும்பம், உறவுகள், நண்பர்கள் அயலவர்கள் என மகிழ்ச்சியான இந்த வாழ்க்கையை, அச்சுறுத்தும் கொரோனா அழித்து விடுமா என்றெல்லாம் நேசன் நினைத்து கவலைப்படுவதுண்டு.

அவ்வாறு நினைக்கும் போதெல்லாம் தனது மனைவியை பாசத்தோடு பார்ப்பான். குழந்தைகள் அருகில் நின்றால், அள்ளி அணைத்து முத்தம் கொடுப்பான். வீட்டில் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும் அம்மாவின் கண்ணாடி அணிந்த முகத்தை அன்போடு கவனிப்பான்.

செய்ய வேண்டிய சில வேலைகளை எழுதிக் கொண்டு வந்த சிறு துண்டை சட்டைப் பைக்குளிலிருந்து வெளியே எடுத்துப் பார்த்தான். முதலில் சைனீஸ் கடைக்குச் சென்று பிள்ளைகளுக்கு பழங்கள் மற்றும் நூடில்ஸ் கோழி இறைச்சி ஆகியவற்றை வாங்கிக் கொள்ளலாம் என்ற நினைப்பில் வாகனத்தை எல்ஸ்மெயர் வீதிக்குத் திருப்பினான்.

வாகனத்திலிருந்து இறங்கியபோது உள் கண்ணாடியில் தொங்கிக் கொண்டிருந்த "மாஸ்க்" நேசனின் மூக்கையும் வாயையும் சேர்த்து மறைத்துக் கொண்டது. சைனீஸ் கடைக்குள் புகுந்து கொள்வதற்கு முன்பாக அங்கு வைக்கப்பட்டிருந்த சுத்தப்படுத்தும் திரவத்தை எடுத்து கைகளில் நன்கு தடவிக் கொண்டான்.

கடைக்குள்ளே அனைவருமே ஒவ்வொரு நிறத்திலும் டிசைனிலும் "மாஸ்க்" அணிந்த வண்ணம் பொருட்களை எடுத்து "சொப்பிங் பாஸ்கட்"டில் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

நேசன் பதினைந்து நிமிடங்களில் தனது "சொப்பிங்" கை முடித்துக் கொண்டான். மீண்டும் தனது "நிசானில்" ஏறியபோது பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்பதை நினைவுபடுத்திக் கொண்டான்.

கடந்த நான்கு மாதங்களாக தனது நிறுவன வேலைகளை வீட்டிலிருந்தே செய்கின்றான். மனைவி ஒரு அறையிலும் பிள்ளைகள் ஒரு அறையிலும், இவன் ஒரு அறையிலுமாக அவர்களது வீடு ஒரு அலுவலகமாகவும் பாடசாலையாகவும் மாறியிருந்தது.

உலகின் கழுத்தைப் "கொரோனா" பிடித்துக் கொண்டது போல மக்கள் நினைத்துக் கொண்டிருந்தாலும் அதற்கு அஞ்சுவதாக இல்லை. அரசாங்கங்கள் விடுக்கும் அறிவித்தல்களை அது அவர்கள் "கடமை" என்று எண்ணிக்கொண்டு தங்கள் எண்ணப்படி அல்லவா மக்கள் நடந்து கொள்கின்றார்கள். தொடர்ந்து கொண்டிருக்கும் மரணங்கள் வெறும் எண்ணிக்கை என்று எண்ணுபவர்கள் ஏன் அவற்றை உயிர்கள் என்று மதிப்பதில்லை.

வழமையாக காரில் ஏறியவுடன் உடனேயே "மாஸ்க்" கை முகத்திலிருநது அகற்றிவிடும் நேசன், இன்று அவ்வாறு செய்யவில்லை.

நேசனுக்கு இன்னும் அரை மணி நேரம் இருந்தது. கொம்பியூட்டரின் முன்னால் அமர்ந்து மீண்டும் தனது அலுவலக வேலையைத் தொடருவதற்காக. எனினும் பாடசாலைக்குச் சென்று அந்தப் பெண்மணியை சுகம் விசாரித்து விட்டுச் செல்வோம் என்ற அந்த முடிவை மாற்ற விரும்பவில்லை.

வழமைபோல, பாடசாலையின் வேலிக்கு வெளியே வீதிக் கரையோரமாக தனது வாகனத்தை நிறுத்திவிட்டு அந்த பெண் நிற்கும் இடத்தை கவனித்தான்.

கையில் சிவப்பு நிற "ஸ்டொப்" என்று அச்சிடப்பட்ட வட்டமான பலகை ஒன்றை கைகளில் வைத்துக்கொண்டு அவள் வீதி ஓரமாக நின்கின்றாள்.

சற்று தூரம் நடந்த பின், "ஹாய் ஹவ் ஆர் யூ? என்று கேட்டவண்ணம் அவளுக்கு அருகில் செல்லாமல் தூரத்தே நின்றான் நேசன்.

"ஐ ஏம் குட்" என்று சொல்லிவிட்டு, அவள் சாதாரணமாக நின்றாள், தான் வழமையாகப் சந்தித்துப் பேசும் ஜெனி அல்ல இவள் என்று சில வினாடிகளுக்குள் நேசன் புரிந்து கொண்டான். அதே நேரத்தில் அவளும், நேசனுக்கு அருகில் சென்று அமைதியாகக் கூறினாள்.

"மன்னிக்க வேண்டும். நீ ஜெனியைத் தான் தேடி வந்துள்ளாய் என்பதை நான் புரிந்து கொண்டேன். அவள் இனிமேல் வரமாட்டாள்."

ஒரு வினாடி மௌனத்திற்குப் பின்னர் தொடர்ந்து பேசினாள்.

"ஜெனி. இரண்டு மாதங்களுக்கு முன்பாக சுகயீனம் காரணமாக இறந்து விட்டாள்.. ஆனாபடியால் தான் நான் வேலை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. அவளுக்காக நாங்கள் பிராத்தனை செய்வோம்".

நேசனை அதிர்ச்சியும் கவலையும் ஏமாற்றமும் ஒரே நேரத்தில் வந்து தாக்கின. பேச்சற்றவனாக சில நிமிடங்கள் நின்றான்.

ஜெனியின் சிரித்த முகமும் அழகான ஆங்கில உச்சரிப்பும் நேசனுக்கு எப்போது உற்சாகத்தைத் தருவன.

வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறிய பெற்றோரையும் அவர்களது பிள்ளைகளையும் அன்பாக சுகம் விசாரித்து மகிழும் பக்குமான பண்பு கொண்ட பெண் அல்லவா அவள்.

"நீங்கள் எல்லாம் உங்கள் நாட்டை விட்டு வந்தது எவ்வளவு நல்ல விடயம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.. இந்த நாடு உங்களை நல்லாப் பார்த்துக் கொள்ளும்".

ஜெனி தன்னொடு உரையாடுகின்ற போதெல்லாம் தனது குடும்பத்தையும் உறவினர்களையும், அது மட்டுமல்லாது ஊரில் யார் யார் உறவினர்கள் இருக்கின்றார்கள்? அவர்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்களா என்று அக்கறையோடு விசாரித்த அந்த நாட்கள் நேசனின் நினைவில் வந்தன.

"எவ்வளவு பரந்த உள்ள ஜெனிக்கு" அவன் உதடுகள் அவளை மெச்சின.

தனது வீதிப் பாதுகாப்பு பணியைச் செய்து கொண்டிருந்த அந்த புதிய பெண், ஒரிரு மாணவர்கள் வீதியைக் கடந்த செல்ல காத்திருந்தபடியால் அவர்களை நோக்கிச் சென்றாள்.

தனது வாகனத்தை நோக்கி நடந்தான் நேசன். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது. தான் அன்பு செலுத்தும் ஒரு சகோதரியைப் பறிகொடுத்தது போன்று அவனது இதயம் துடித்தது.

வீட்டு வாசலில் வாகனத்தை நிறுத்திவிட்டு கடையில் வாங்கிய சாமான்களை கைகளில் எடுத்தபடி சென்று மெதுவாக கதவைத் திறந்தான். வழக்கம் போல சாமான்களை அவனிடமிருந்து பெற்றுச் செல்வதற்காக வாசலுக்கு வந்த மனைவி நேசனின் முகத்தில் தென்பட்ட மாற்றத்தைக் கவனித்து விட்டு அவனிடம் கேட்டாள்.

"என்னப்பா ஒரு மாதிரி இருக்கிறியள்?"

"பள்ளிக் கூடத்தில பிள்ளைகள் றோட்டை கடக்கிறதுக்கு துணையாப் போற ஜெனி செத்துத்திட்டாவாவாம். இப்ப வேறு ஒரு ஆள் வந்திருக்கின்றா"

மீண்டும் அவனை மீறி வழிந்த கண்ணீரை நேசன் நிறுத்த முயற்சிக்கவில்லை. "அந்த கண்ணீர் அபிசேகம் அற்புதமான பெண்மணி ஜெனியின் ஆத்மாவிற்காக" என்று நினைத்துக் கொண்டானோ?

மனைவியும் பிள்ளைகள் இருவரும் அமைதியாக அவனையே பார்த்த வண்ணம் நின்றார்கள்.

***நன்றி:***
***"ஞானம்" இலக்கிய மாத இதழ் (இலங்கை)***



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 925



## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை. "

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, இக்கருத்தின் அடிப்படையில் வாழ்வது மானிட தர்மமாகும். ஆயினும் ஒவ்வொருவரும் தமது எண்ணம், வாழ்வுமுறை, சமுதாயஅமைப்பு, பூகோள அமைப்பு, இவற்றிற்கிணங்க தமக்கேற்றமுறையில், அறிவுசார்ந்த சிந்தனையுடன் அந்தந்தச் சமுதாயத்தின் ஆன்றோர் காட்டிய வழியில் இறைவழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் சமுதாய வளர்ச்சிப்பின்னணியோடு மெஞ்ஞான விஞ்ஞான நோக்கங்களைக் கருத்தில் கொண்டு மக்களை நெறிப்படுத்தும் நோக்கில், கோவில்களும் அங்கு எழுந்தருளும் திருவுருவங்களும் அமைக்கப்பட்டு வழிபாடியற்றப்படுகின்றது.

இவ்வாறான கோவில்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. தற்கால சூழ்நிலையில் நாடுகளிலும், இனங்களிலும், சமூகங்களிலும் நிகழும் நிகழ்வுகள் ஆழ்மனதில் பலமான தாக்கத்தை ஏற்படுத்தி மன அமைதியையும், தேக ஆரோக்கியத்தையும் அழிப்பதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரையும் சுற்றி நிகழும் எதிர்மறையான சம்பவங்கள் எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களை நீக்கி மன அமைதியைக் கொடுக்க வல்லவையாகக் கோவில்கள் விளங்குகின்றன.

திருக்கோவில்களின் அமைப்பை நோக்கின், எங்கும்நிறைந்த எல்லாம்வல்ல பரம்பொருளின் இறைஅருளை, இந்தப் பிரபஞ்சத்திலிருந்து ஈர்த்தும், சேகரித்தும் அதனை கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பெருவல்லமைபடைத்தவையாக உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கேற்றவகையிலேயே பல சூட்சுமமான நெறிகளையும், சாத்திரவிதிகளையும் கடைப்பிடித்து கோவில்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இவ்வாறான கோவில்களுக்குச் சென்று வரும்பொழுது ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் எதிர்மறையான எண்ணங்கள் ஆழ்மனதில் வேரூன்றாது தடுக்கப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே ஆன்றோர்கள் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம்தொழுவது சாலவும் நன்று" என்ற மூதுரைகளை மக்களுக்கு அறிவித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஒருவனாகிய இறைவனுக்குப் பல்வேறு வடிவங்களைக்கொடுத்து அமைக்கப்பட்ட திருக்கோவில்கள் உலகமெங்கும் காணப்படுகின்றன. ஈழத்திலும் ஆயிரக்கணக்கான கோவில்கள் அமைந்து அருள்பாலித்து வருகின்றன. இவ்வாறான கோவில்களுள் சாதி, மதபேதமின்றி அனைவரும் தொட்டு வணங்கும் திருவடிவமாக விநாயகர் வடிவம் காணப்படுகின்றது.

அரசமரத்தடியிலும், குளத்தங்கரையிலும், வயல்வெளிகளின் மத்தியிலும் சிறு குடிசைகளிலும் எழுந்தருளச் செய்து வழிபடும் வணக்கமாக விநாயக வணக்கமுறை காணப்படுகின்றது. இவ்வாறு இலகுவாக வழிபடும்முறையில் அமைந்த தெய்வமாக விநாயகர் காணப்படுவதோடு, முதல் வணக்கத்தினை விநாயகருக்கு அளித்தே ஏனையதெய்வங்களை வழிபடும் வணக்கமும் தொன்றுதொட்டு மரபாக விளங்குகின்றது. எக்காரியத்தைத் தொடங்கினும் அவை விக்னமின்றி நிறைவேற விநாயகரை வழிபட்டே ஆரம்பிக்கவேண்டும் என்ற மரபும் தமிழர்களுடைய சம்பிரதாயங்களிலே காணப்படுகின்றது. அறிவின் மூலமாக ஓம் என்ற பிரணவத்தின் வடிவமாக பிள்ளையார் விளங்குவதும் ஆழ்ந்த கருத்தையும் அறிவின் முதிர்ச்சியையும் காட்டுவதாக அமைகின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைப்பிரதேசத்தின் மத்தியில் மக்கள் குடியிருப்பு நிறைந்து காணப்படுகின்ற பகுதியில் அமைந்திருக்கும் ஆலடி விநாயகர் ஆலயம், மக்களால் பெரிதும் போற்றப்படும் ஆலயமாகக் காணப்படுகின்றது. இந்த ஆலயம் திருகோணமலையில் பிரசித்திபெற்ற சக்திதலமாக விளங்குகின்ற பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு அருகே அதன் ஈசானதிக்கில் அமைந்திருப்பது, இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகக் காணப்படுகின்றது. ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஈசான திக்கில் பஞ்சஈஸ்வரங்களுள் ஒன்றாக விளங்கும் சரித்திரப்பிரசித்திபெற்ற திருக்கோணேசர் ஆலயம் காட்சியளிக்கின்றது. ஆலடிவிநாயகர் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அங்கிருந்தபடியே திரும்பிநின்று கோணேசப்பெருமானை வணங்கி வழிபாடு செய்வது வழமையான நிகழ்வாகக் காணப்படுகின்றது.

திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஆரம்பம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகக் கருதமுடியும். ஆலயத்தின் வடக்குத்திசையில் ஏறக்குறைய 200 யார் தூரத்தில் ஐயனார்கேணி என்றபகுதி காணப்படுகின்றது. வெறும்நிலப்பரப்பாகக் காணப்பட்ட இப்பகுதி பின்னாளில் மக்கள் குடியிருப்புப் பிரதேசமாக மாறிவிட்டது. இதன்பின்னர் இங்கு அமைந்துள்ள வீதியை ஐயனார்கேணிவீதி என அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. முற்காலத்தில் ஐயனார்கேணிப்பகுதி, வியாபாரம், மற்றும் யாத்திரை செய்வோர் தங்கிச் செல்லும் முக்கிய இடமாகக் காணப்பட்டுள்ளது.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனையசொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களதுவிருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7


HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #26 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்



மனிதனின் நாகரிக வளர்ச்சியின் பயனாய் தோன்றியது கலை இலக்கியங்கள். இயல், இசை, நாடகங்கள். விஞ்ஞான வளர்ச்சியின் பயனாய் ஊமை படம், பேசும் படம், கலர் படம், 3டி என்று பலவிதங்களில் விஸ்வரூபமெடுத்துள்ளது. கனவு தொழிற்சாலை என்று பலராலும் சிறப்பிக்கப்படும் திரைப்படத் துறையின் அபரிமிதமான வளர்ச்சிக்கு தீனி போட்டவர்கள் - உரம் ஊட்டியவர்களுள் நடிப்பாற்றலால் தனித்து நின்றவர் தனக்கு நிகராய் வேறொருவர் தோன்றவில்லை என நிருபித்தவர் நமது நடிகர் திலகம் என்றால் அதில் இருவேறு கருத்துக்கிடமில்லை என்பது எனது அபிப்ராயம்.

நடிகர் திலகம் ஏற்று நடித்த நவரச பாத்திரங்களுள் காதல் சிருங்காரம் தனித்து ரசிக்கப்பட வேண்டிய தொன்றாகும். காதல் காட்சிகளுள் சங்க இலக்கியத்தில் எழுதப்பட்ட தலைவன் தலைவியர்களுக்கிடையே தோன்றும் ஊடல், மெய் தீண்டல், ஆரத்தழுவுதல், காதல் உணர்ச்சி மேலீட்டால் மெய்மறந்திருத்தல் போன்ற உணர்வுகளை விரசமின்றி அழகுணர்ச்சி பொங்க வெளிப்படுத்துதலில் தன்னுடன் ஜோடி சேர்ந்து காதல் காட்சிகளுக்கு மெருகூட்டும் நாயகிகளை அவர் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை இங்கு நான் காட்சிப்படுத்த விரும்புவது. காதல் ரசம் பொங்கும் காட்சிகளில் இவருடன் இணைந்து நடித்தவர்கள் பத்மினி - கே ஆர் விஜயா - வாணிஸ்ரீ - உ'ாநந்தினி - மஞ்சுளா - தேவிகா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள். இங்கு நான் திருமதி தேவிகா நடித்த படங்களில் சிவாஜி அவர்களுடன் இணைந்த காட்சிகளை இலக்கிய நயம் மிக்க கவியரசு கண்ணதாசன் (சங்க இலக்கியப் பாடல்) காட்சிப்படுத்திய பாடலோடு ஒப்புநோக்க விழைகிறேன் விரும்புகிறேன்.

*"ஊடலெனவொன்று தோன்றி யலருறூஉங்*
*கூட லிழந்தேன் கொடியன்னாய் - நீடெங்கின்*
*பாளையிற் றேன்றொடுக்கும் பாய்புன் னீர்நாட்டுக்*
*காளையைக் கண்படையுட் பெற்று"*

முத்தொள்ளாயிரம் 99

இச்செய்யுளுக்கு கவியரசு கண்ணதாசனார் தரும் இலகு கவிதை வரிகளை பார்ப்போம். இக்கவிதை வரிகளைக் காட்சிப்படுத்தும் நடிகர்திலகம் நடித்த காட்சிகளை பின்பு ரசிப்போம்.

ஆழிவாய் முத்தம் அடுக்கிய பற்கள்
வேழத் தலையென விம்மும் மார்பகம்
தாழை மணக்கும் தளிர்படு மேனி
செங்காந் தட்கை சிறுமலர் நாசி
கனிபிளந் தன்ன கன்னக் கதுப்பே
ஆடவர் உதடுகள் ஆவல் மீதுறக்
கூடத் துடிக்கும் கோவை உதடுகள்
பாதந் தொட்டுப் பார்க்கினும் உலக
மலருக் கெல்லாம் மலரெனும் மென்மை!
அன்னவள் - அழகுச் சின்னவள் - ஓர் நாள்
தோழியை விளித்துச் சொல்லுவாள் தோழி!
தென்னம் பாளையில் தேனீக் கூட்டம்
தேனைச் சேர்க்கும் சிறப்புடைத் தாகிய
புனல்சூழ் நாட்டுப் பொன்னி வளவன்
ஆளை மயக்கும் காளை, அந்தியில்
தூங்கும் என் முன் தோன்றினன் தோன்ற
கையகம் தொட்டும் மெய்யகம் தொட்டும்
கட்டிப்பிடித்துக் கையோடு கையை
இட்டுப் பிணைத்தும் ஈந்தனன் முத்தம்!
முத்தம் கொண்டதால் மூணடது காமம்!
காட்டுக் காளை கன்னியின் உடலைத்
தொட்டாற் காமம் தோன்றா தா சொல்?
தோன்றி, இன்பச் சுகத்தில் தள்ள,
காவலன் என்னைக் கலப்பான் என்றே
ஆவண செய்தேன்! ஆவலில் அன்னவன்
வதனம் நோக்கி, வாங்கிய கையை
உதட்டில் வைத்தேன்! ஒன்று கொடுத்து
பள்ளியிற், சற்றுத் தள்ளிப் படுத்து
"பருகுக!" என்றேன்! பாவி என் சொல்வேன்?
இடையில் ஓர் பொருள் என்னவோ போலத்
தடுத்ததே! ஊடல் தானது! சரியாய்
நினைவுமில்லை அதனை நீக்கி,
"காவல! பெண்மை களத்தினைக் கொள்க!"
என்றேன்! அய்யோ என்னடி சொல்வேன்,
காவலன் இல்லை! காதல் பாதியில்
நின்றதே! அடியே! நிறைந்த காமம்
பொங்கும் வேலை போனது கனவேயாம்
என்று பாடிய இன்ப ஓவியம்
முத்தொள்ளாயிர முறுவலில் ஒன்றாம்!
சோலை வளமும் தொலையாக் காதலும்
வாழ்வுக் கிலக்கண வகையும், காம
விளையாட்டெல்லாம் விளங்கும் காட்சியும்
எப்படி தொடுவது எப்படிப்பாவையை
பின்புற மிருந்து பிடிப்பது, சோலையில்
மார்பகம் சேர்த்து மகிழ்வது என்னும்
விந்தையும் காட்டும் வியன் மிகு பாக்கள்
நூற்றுமுப்பது, நூபுர ஒலிபோல்
முழங்கும் ஏடு முத்தொள்ளாயிரம்!



..... இவ்வளவு விரிவாக முத்தொள்ளாயிரக் கவிதை வரிகளை ஏன் பதிவு செய்தேன் என்றால், தமிழர்களின் சொத்தாகிய காதலும், வீரமும் செறிந்த வரலாறுகள் என்றென்றும் வாசித்து வாசித்து அனுபவிக்க வேண்டிய பக்கங்களாகும். அவ்வகையில் தமிழ் சினிமா காட்சிகளில் வரும் சிவாஜி பட காதல் காட்சிகள் சங்க இலக்கிய காதல் காட்சிகளை நினைவூட்டுவது போல் அமையப் பெற்றதாகும். நடிகர் திலகம் அவர்கள் கதாநாயகனாக காதல் தலைவனாக நடித்த பல சமூக வரலாற்று புராண இதிகாசப் படங்களில் அவரோடு இணையும் நாயகிகளான நட்சத்திர நடிகைகளோடு நளினமாகவும் தமிழிலக்கிய மரபு மாறாத வண்ணம் காதல் சிருங்காரம் செய்து நடிப்பார். இவ்வாறு திருமதி. தேவிகாவுடன் 1961 இல் வெளிவந்த "பாவமன்னிப்பு" படத்தின் மூலம் இணைகிறார் சிவாஜி அவர்கள். மதம் கடந்து மனங்கள் மட்டும் அன்பு செய்யும் கதையம்சம் கொண்ட இப்படத்தை பீம்சிங் அவர்கள் இயக்கியிருந்தார். நடிகர் திலகம் ஒரு கண்ணியமிக்க இஸ்லாமிய வாலிபனாகவும் - வளர்ப்பு முறையால் கிறிஸ்தவப் பெண்ணாகவும் தேவிகா அறிமுகமாவார். மதத்தையும், ஜாதியையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு இரண்டு இதயங்கள் இடம்மாறி ஒருவர் மீது ஒருவர் காதல் செய்யும் இக்காட்சியை "காதலுக்கு ஜாதியில்லை மதமுமில்லையே! கண்கள் பேசும் வார்த்தையிலே பேதமில்லையே!..." என்று கவியரசு தனது பாடல் வரிகளால் கொண்டாடுவார். சிவாஜி அவர்கள் அசல் இஸ்லாமிய இளைஞனாக எந்தவித விரசமான உடல் மொழியையும் வெளிக்கொணராது புனிதமான விழிப்பார்வை மூலம் தன் உணர்வுகளை வெளிப் படுத்துவார். அவ்வாறே தேவிகா அவர்களும் இதயம் முழுவதும் நிரம்பி வழியும் காதலை விழிகளில் தேங்கி நிற்கும் நீர் துளிகளாக்கி காதலன் கரங்களைப் பற்றி மௌனமாக இருவரும் ஒருவரையொருவர் விழிகளால் விழுங்கும் அற்புதக்காட்சி புதியதொரு பரிமாணமமாகும். "காமம் கலக்காத ஆன்மநேயக் காதல் இதுதான்! என்பார் "தமிழருவி மணியன்". இவ்வாறு தொடர்ந்து "அன்புக்கரங்கள்" "பலே பாண்டியா" "ஆண்டவன் கட்டளை" "கர்ணன்" "பழநி" "குலமகள் ராதை" (இரு நாயகிகள்) "ஞாயிறும் திங்களும்" "பந்தபாசம்"? நீலவாணம், "சாந்தி" என இருவரும் இணைந்த காட்சிகள் மறக்க முடியாதவை. திரைப்பட காதலாகவிருந்தாலும் "அன்னை இல்லம்" இவர்கள் இருவரும் இணைந்து நடித்த காதல் காட்சிகளைக் கண்டு இலக்கியநயம் சொல்ல வைத்தது.



"எண்ணிரண்டு பதினாறு வயது - அவள்
கண்ணிரண்டில் ஆடுதம்மா காதல் கொண்ட மனசு...
முன்னிரண்டு மலரெடுத்தால் என்மீது தொடுத்தாள்
முக்கனியும் சர்க்கரையும் சேர்த்தெடுத்துக் கொடுத்தாள்..
காலளந்த நடையினிலே என் காதலையும் அளந்தாள்...
என்ற கவியரசு கண்ணதாசனின் பாடல்வரிகளினிடையே வரும்.."
சுற்றி நான்கு சுவர்களுக்குள் தூக்கம் இன்றி கிடந்தோம்... ஒரு துன்பம் போன்ற இன்பத்திலே இருவருமே.. நடந்தோம்...

"துன்பம் போன்ற இன்பம்" என்பது தலைவனும் தலைவியும் மெய்மறந்து சுகித்திருக்கும் நிலை! சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் மனையறம் படுத்த காதையில்... கோவலனும் கண்ணகியும் மண வாழ்வில் மகிழ்ந்திருந்த நிலையை காட்சிப்படுத்தும் போது "...தாரும் மாலையும் மயங்கிக் கலந்தது போல் அதாவது அவள் மார்பில் அணிந்திருந்த மணமாலையும் மாலையில் உள்ள மலர்களை கோர்க்க உதவிய நாரும் இணைந்தது போலும், கோவலன் மார்பில் தலைவி மயங்கியிருந்தாள். இக்காட்சியை மனக்கண்ணில் கொண்டே தான் கவியரசு துன்பம் போன்ற இன்பத்திலே என சிவாஜி தேவிகா இருவரினதும் காதல் இன்பத்தைக் காட்சிப்படுத்துகிறார். இலக்கியத்தில் இக்காட்சிகளை நாகரிகமாக சொல்லுவதே "இடக்கடரக்கல்", என்பதாகும்.

அதே படத்தில் இன்னுமொரு பாடல் காட்சி வரும். "மடி மீது தலை வைத்து விடியும் வரை தூங்குவோம்
மறுநாள் எழுந்து பார்ப்போம்.. எனும் வரிகளோடு ...வாயின் சிவப்பு விழியிலே...
மலர்க்கண் வெளுப்பு இதழிலே...
மங்கலக் குங்குமம் நெஞ்சிலே...
இரவே இரவே விடியாதே... இன்பத்தின் கதையை முடிக்காதே...
சேவல் குரலே கூவாதே...
சேர்ந்தவர் உயிரைப் பிரிக்காதே...
இப்பாடல் வரிகளுக்குள் ஆழமாக போவீர்களாயின் முதலில் உங்களுக்கு அறிமுகப்படுத்திய "முத்தொள்ளாயிரச் செய்யுள் இன்பத்தை நினைவூட்டும்.

இவ்வாறு சிவாஜியும் தேவிகாவும் இணைந்து நடித்த படங்களில் வரும் காட்சிகள் திருமதி தேவிகாவின் தாயாருக்கு வேறு விதமாக அர்த்தம் சொல்லப்பட்டதாகவும் செய்திகள் வந்து போயின! "என்னடி நீ சிவாஜியை கட்டிக்க போறியாமா..." என எச்சரிப்பு குரல் எழும்பும் அளவிற்கு இருவரதும் காதல் காட்சிகள் விளங்கின! விமர்சிக்கப்பட்டன! ஆனால் அதில் உண்மை எதுவுமில்லை. திருமதி தேவிகா பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி சென்றதை நினைவூட்ட விரும்புகிறேன்.

(...சந்தித்தேன் சிந்தித்தேன் நூலிலிருந்து... "அவர் கதாநாயகியாக நடித்த போது இன்றைக்கிருக்கும் பல நடிகைகளை விட நன்றாகவே நடித்தார் அழகாகவே இருந்தார். வாழ்க்கையை தேர்ந்தெடுக்கத் தெரியாத காரணத்தால் வாழ்க்கையில் தோல்வியடைந்தார். இல்லையென்றால் தேவிகாவின் குணத்திற்கும், நடத்தைக்கும் எவ்வளவோ நிம்மதியான வாழ்க்கை அமைந்திருக்கும்.

"என்ன உங்கள் படங்களில் தேவிகாவை விட்டால் வேறு யாரும் கிடைக்கவில்லையா? என்று நண்பர்கள் பலர் என்னை கேட்பார்கள். எந்த குடை மழையிலிருந்தும் வெயிலிருந்தும் என்னை காப்பாற்றுகிறதோ அந்தக் குடையை தானே நான் தேர்ந்தெடுக்க முடியும்" என்றார், கண்ணதாசன்.

அடுத்த இதழில் "காதல் மன்னனும்... நடிகர் திலகமும்...!"

## வீணாவின் கிறுக்கல்

கண்ணில் தோன்றும் காட்சியெல்லாம்
கனவாய் போன போதும்
கண்மணியே நீயும் கலங்காமல்
கண்ணைத்திறந்து பாரு,
காட்சி கனவாய் போனால் என்ன?
கண்கள் மிஞ்சியதன்றோ?
கனவாய் தெரிந்த காட்சி கூட
கண்முன் நிஜமாய் வருமே ஒருநாள்!

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# மலேசிய தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம்: டான்ஸ்ரீ சோமா அறவாரியத்தின் 28ஆம் ஆண்டு இலக்கியப் போட்டி பரிசளிப்பு



கோலாலம்பூர், டிச.17:

கொரோனா ஆட்கொல்லி கிருமியின் தாக்கம் இடம்பெற்றுள்ள இந்த வேளையிலும் தேசிய நிதி கூட்டுறவு சங்கம் நிறுவியுள்ள டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி - இலக்கிய அறிவாரியத்தின் தமிழ்ப் பணி தொய்வின்றி தொடர்கிறது.

ஆண்டுதோறும் வழக்கம்போல விருந்துடன் ஏற்பாடு செய்யப்படும் கூட்டுறவு சங்க இலக்கியப் போட்டி பரிசளிப்பு நிகழ்ச்சி, இந்த ஆண்டு நடைபெற முடியாமல் போனாலும், போட்டியில் பங்குபற்றியவர்களில் வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கான பரிசுத் தொகை பணவோலை மூலம் அளிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்கத் தலைவரும் மொழி-இலக்கிய அறவாரயத் தலைவருமான டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் அறிவித்துள்ளார்.



இந்த நிலையில் கூட்டுறவு சங்கம் இடையறாது ஆற்றிவரும் தமிழ்ப் பணியை மலாயாப் பல்கலைக்கழக தமிழாய்வியல் பிரிவு (இந்திய ஆய்வியல் துறை) பாராட்டுவதாக அதன் தலைவர் முனைவர் சு.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

ஓர் இனத்திற்கு அரணாக இருப்பது அந்த இனத்தின் மொழிதான். எந்த இனமாக இருந்தாலும் அந்த இனத்தின் மேன்மைக்கும் கூரிய சிந்தனை மேம்பாட்டிற்கும் துணைநல்குவது நிச்சயமாக அதன் தாய்மொழிதான். அந்த வகையில் மலேசியவாழ் தமிழர்களின் மொழி வளர்ச்சிக்கும் தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்கும் தொடர்ந்து பாடாற்றி வரும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி - இலக்கிய அறவாரியம் ஆற்றிவரும் பங்களிப்பு காலத்தால் போற்றத்தக்கது என்று மணிமாறன் பாராட்டியுள்ளார்.

மருத்துவத் துறையின் கட்டுக்கு அடங்காமல் உலக மக்களை அச்சுறுத்தியும் விழ்த்தியும் வரும் கொடிய ஆட்கொல்லிக் கிருமியான கொரோனா, பன்னாட்டு அளவில் எத்தனையோ நடைமுறைகளை முடக்கியும் மாற்றியும் அமைத்துள்ளது. இத்தகைய சூழலிலும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம், சளைக்காமல் தமிழ் - இலக்கியப் பணியை நிறைவேற்றி வருகிறது.



இளம் எழுத்தாளர்களையும் மாணவர்களையும் ஊக்குவிப்பதற்காக தமிழிலக்கியப் போட்டியை கடந்த 28 ஆண்டுகளாக தொய்வின்றி நடத்திவரும் கூட்டுறவு சங்கம், கடந்த 2010-ஆம் ஆண்டு முதல் டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி-இலக்கிய அறவாரியத்தின்வழி இந்தப் பணியை மேற்கொண்டு வருகிறது. இதற்கென தனி நிதியத்தையும் கூட்டுறவு சங்கம் உருவாக்கி உள்ளது.

இதற்கெல்லாம் தகுதி வாய்ந்த தலைமைதான் காரணம். நல்ல இடத்தில் அல்லது நல்லவரிடத்தில் நாணயம் இருந்தால், அதனால் நான்கு பேருக்கு நன்மை விளையும் என்று முன்னோர்கள் சொல்லி வைத்ததும் இதன் அடிப்படையில்தான். டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி - இலக்கிய அறவாரியத்தின் கல்விப் பணிக்கு இந்திய ஆய்வியல் துறையின் சார்பில் மீண்டும் பாராட்டு தெரிவிப்பதாக முனைவர் மணிமாறன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய கொரோனா பருவத்தில் நிகழ்ச்சி நடத்த முடியாதென்பதால், 2020-ஆம் ஆண்டு இலக்கியப் போட்டி வெற்றியாளர்களுக்குரிய பரிசுத் தொகையை நேரடியாக அனுப்புவதென்று அறவாரியத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டது. கூட்டுறவு சங்கத்தின் தமிழ் அறவாரியம் இந்தப் பணியை தொடர்ந்து முன்னெடுக்கும் என்று தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத் தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் தெரிவித்தார்.

இருந்தாலும், கிள்ளான் பள்ளத்தாக்கில் வாழ்கின்ற இலக்கியவாணர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் விருந்துடன் கூடிய ஓர் இலக்கிய மாலைப் பொழுதை தவற விட்டதில் வருத்தம்தான்.

இவ்வாண்டு டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி - இலக்கிய அறவாரிய இலக்கியப் போட்டியின் சிறுகதைப் பிரிவில் மின்னல் பண்பலை வானொலியில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்றவரும் சமூக - மொழி ஆர்வலருமான வெ.ஆறுமுகம் முதல் பரிசை வென்று 2,500 வெள்ளியைத் தட்டிச் சென்றுள்ளார்.

பொதுவாக மாத ஊதியம் பெறுபவர்களுக்கு ஆண்டிறுதியில் கிடைக்கும் ஆறுதல் ஊக்கத் தொகைதான். அந்த வகையில், "பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த எனக்கு முதல் பரிசு கிடைத்திருப்பதால், ஆண்டிறுதியில் ஊக்கத் தொகை கிடைத்ததைப் போல உணர்கிறேன் கூட்டுறவு சங்கத்திற்கு நன்றி" என்று தெரிவித்த ஆறுமுகம், இந்தப் பரிசு மேலும் எழுதும் எண்ணத்தை என்னிடம் தூண்டியுள்ளது என்றும் சொன்னார்.



அவரைப் போல மரபுக் கவிதைப் போட்டியில் முதல் பரிசு வென்ற மா. அ. சந்திரன், "பரிசு கிடைக்கிறதோ இல்லையோ, ஆண்டுதோறும் எழுத வேண்டும் என்ற எண்ணத்தை கூட்டுறவு சங்கம் ஊட்டி வருகிறது. நானும் அடிக்கடி கூட்டுறவு சங்கத்திடம் இருந்து பரிசுப் பணத்தை பெற்றுக் கொண்டுதான் வருகிறேன்" என்றார்.

புதுக்கவிதைப் பிரிவில் முதல் பரிசு வென்றவரும் சுங்கைப் பட்டாணி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளருமான உதயகுமார் கந்தசாமி, "என்னுடைய கல்விப் பயணத்தில் நெருக்கடியான காலக்கட்டங்களில் கூட்டுறவு சங்க இலக்கியப் போட்டிகளில் கிடைத்த பரிசுப் பணத்தைக் கொண்டுதான் கட்டணம் செலுத்தி இருக்கிறேன். அத்துடன் எழுத வேண்டும் என்ற ஊக்கத்தையும் அளித்துவரும் கூட்டுறவு சங்கம் என் வாழ்க்கைப் பாதையில் இரண்டறக் கலந்தது" என்றார்.

இந்த வகையில் அனுபவம் மிக்க எழுத்தாளர்களுடன் இளம் எழுத்தாளர்களையும் மாணவர்களையும் எழுத்துலகில் இழுத்துவிடும் கூட்டுறவு சங்கத்தின் தமிழ், தமிழிலக்கியப் பணி காலத்தால் போற்றப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**நக்கீரன்** - Nakkeeran **013-244 36 24**

# யாழ்ப்பாணத்தில் தீயிட்டு அழிக்கப்பட்ட பொது நூலகத்தின் நினைவாக மாபெரும் நூலகத்தை கனடாவில் நிறுவ வேண்டும் என்கிறார் சுவாமி நித்தியானந்த பரமஹம்சர்

டிசம்பர் மாதம் 13ம் திகதி, கனடாவாழ் மக்களுக்குக் குறிப்பாக தீட்சை பெற்றுக்கொண்ட மக்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சுவாமி நித்தியானந்த பரமஹம்சர் அவர்கள் கனடாவிலுள்ள தன்னுடைய பக்தர்கள், தொண்டர்கள் ஆகியோர்களைச் சந்தித்து உரையாற்றியிருக்கின்றார்.இது தொடர்பாக செய்தியாளர்களுக்குத் தெரிவித்த கனடா கைலாசம் அமைப்பினர், சுவாமி நித்தியானந்த பரமஹம்சர் அவர்கள் மேலும் பல ஆச்சரியமான விடயங்களையும் தங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளதாவும் அறியப்படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கனடாவின் ரொறன்ரோ மாநகரில் கைலாயம் அமைப்பதற்கான பணியினை விரைவில் முன்னெடுக்கும்படியும், அதற்காக கனடிய அரசுடன் தொடர்புகளை முன்னெடுக்கும்படி சுவாமி அவர்கள் கேட்டுள்ளார். அத்துடன் இலங்கை யாழ்ப்பாணத்தில் தீயிட்டு அழிக்கப்பட்ட யாழ் பொது நூலகத்தின் நினைவாக ஒரு மாபெரும் நூல்நிலையமொன்றை அமைப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையானபோது பல மில்லியன் கணக்கான நூல்களம், ஓலைச் சுவடிகளும் எரிந்து சாம்பலாகிவிட்டன. அதை ஈடுகட்டத்தான் இந்த நூலகம் அமையவுள்ளதெனவும், அது அமையவிருக்கின்ற இடம் கனடாவில் அதிகமான இந்துக்கள் வாழுகின்ற மார்க்கம் பகுதி எனவும் குறிப்பிட்டிருந்தார். அமையவிருக்கின்ற நூலகத்திற்காக பத்தாயிரம் தமிழ்நூல்களும். ஒருலட்சம் இந்து மதம் சம்பந்தமான நூல்களும் தயாராகவிருக்கின்றன எனவும் தெரிவித்திருக்கின்றார். அந்த நூல் நிலையத்தை அண்மித்து ரொறன்ரோ கைலாயமானது அமையும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.



அவர் ஏற்கனவே பிரளைய காலத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பல முறை வலியுறுத்தியிருக்கின்றார். அத்துடன் தன்னுடைய பக்தர்கள் பிரளைய காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மீகப் பயிற்சிகள், தியானம், யோகாசனம் என்பவற்றை வடிவமைத்துக் கொடுத்திருந்தார் என்பது உலகறிந்த உண்மை.

13ம் திகதி. சுவாமி அவர்கள் பிரளையமானது முடிந்து விட்டதென்றும் அறிவித்திருக்கின்றார். அதைத்தொடர்ந்து கனடாவில் பல வேறு பணிகளை எந்தவிதமான தயக்கமுமில்லாது ஆரம்பிக்கும்படியும் கூறியிருக்கின்றார். தயக்கமில்லாது மட்டுமல்ல, அவற்றினை முன்னெடுப்பதற்கான பொறுப்பினை எடுக்கும்போது அந்தப் பொறுப்பெடுப்பவர்களது வாழ்க்கை வழமடையும் என்ற சத்தியத்தையும் விளக்கியிருக்கின்றார். பொறுப்புக்களை எடுக்கும்போது அவர்களது வாழ்க்கை அடுத்த அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்படுவதுடன் அதற்கான சக்தியும் தானாகவே அவர்களை வந்தடையும் எனவும் அழகாக விபரித்திருக்கின்றார்.

மேலும், சுவாமி அவர்கள் இந்துசமயத்தை புனரமைப்பதை முக்கியமான நோக்கமாகக்கொண்டு அதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார். அத்துடன் இந்து சமயத்தின் மேன்மையை மிகவும் ஆதாரபூர்வமாக தெரிவித்திருக்கின்றார். கல்தோன்றி மண்தோன்றாத காலத்தில் வாழ்ந்த மூத்த தமிழ்க்குடி எனவும், அது சிறந்த கலாச்சார விழுமியங்களை கொண்டிருந்ததெனவும், அப்படிப்பட்ட ஆதிசைவை மரபானது தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ வைத்திருந்த காலமொன்றிருந்ததென்றும், அந்த ஆதிசைவ வாழ்வியல் ஒரு அறிவியல் எனவும் கூறினார். மன்னர்காலத்தில் ,மன்னர்கள் ஆதிசைவ வாழ்வியல் முறைகளை உலகெங்கும் பரப்பியிருக்கின்றார்கள் எனவும் அதற்கான சரித்திரத்தை அறியவேண்டுமானால் 20,000 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்று வரலாற்றைப் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன் குமரிக்கண்டத்தைப் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. குமரிக்கண்டமானது இப்போது இருக்கின்ற ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா, மடகாஸ்கர், இந்தியா, இலங்கை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்ததெனவும் அதற்கான ஆதாரம் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரிகளை அழகாக எடுத்தியம்பி சான்றுபகன்றுள்ளார்.



இந்த ஆதிசைவ வாழ்வியல் விஞ்ஞானமானது வேத ஆகமங்கள் மூலமாக உலகிற்கு அருளப்பட்டது எனவும், ஆதிசிவன் இவற்றை அருளியதுடன் பல ரிஷிகள், ஞானிகள், அவதாரங்கள் என புவியில் இறக்கி, இந்த அறிவியலை மக்களுக்குப் போதித்து அவர்களை கடைப்பிடிக்கவும் செய்திருக்கின்றார் என்ற உண்மையை உணர்த்தியிருக்கிறார். அது மட்டுமல்ல, நமது முன்னோர்கள் இந்த சிறந்த அறிவியலை உணர்ந்து, அனுபவித்து, வாழ்க்கையில் வெளிப்படுத்தியும் மேன்மையான வாழ்க்கையை, மனிதனாக வாழாமல், சிவத்தன்மையில் சிவனாகவே வாழ்ந்திருக்கின்றார்கள் என மூத்த தமிழ்க் குடியின் பெருமையைத் தெரிவித்திருகின்றார்.

இப்படி வாழ்ந்த நம்முடைய தமிழினம் இன்று தனது காலச்சாரத்தை இழந்து. தன்னுடைய நாகரீகத்தை இழந்து, தனது அறிவியலை இழந்து தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இந்த இக்கட்டான நிலையில்தான் நாம் கடைப்பிடித்த ஞான அறிவியலின் மிச்ச சொச்சமாக பகவான் ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் அவதரித்துள்ளார்.

எந்த ஆகமத்தைக் கொண்டு நம் முன்னோர்கள் செழிப்போடு வாழ்ந்தார்களோ, அதே அறிவியலை இப்பொழுது ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் புதுப்பித்து தனது சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் வழங்கிவருகின்றார். அவற்றை அறிவுரையாக மட்டுமல்லாது வாழ்வியல் முறைகளை வகுத்தளித்து அந்த ஞான அறிவியலை உயிரோடு வைத்திருக்கின்றார். இப்படி தனி ஒரு ஆளாக நின்று இத்தனையையும் சாதித்த ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் இதன் அடுத்த கட்டமாக இந்த விஞ்ஞான ஆதி சைவ அறிவியலை பாதுகாப்பதற்கும், மற்றைய மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக திருக்கைலாயம் என்ற சாம்ராட்சியத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றார்.

# 13ஏ ஐ ஒழிப்பது புவிசார் அரசியல், அரசியல், பொருளாதார, இராஜதந்திர, பாதுகாப்பு வாரியாக செலுத்த வேண்டிய விலையை ஏற்படுத்தக்கூடும்

**(''குறுக்கும் நெடுக்குமாக 13ஏ ஒழித்தல்'' என்ற தலைப்பில் சென்ற வாரம் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி. *தமிழாக்கம் - கனடா நக்கீரன்)***

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபையின் (யு.என்.எச்.ஆர்.சீ).யின் 19வது அமர்வில் இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க விருப்பம் தெரிவித்திருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். எங்களுக்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் அவரது உள்நோக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரதமர் சிங் கருத்துப்படி, அதன் நோக்கம் நமது இறையாண்மையை மீறவிரும்பவில்லை, "...ஆனால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவும், கௌரவமான வாழ்க்கை வாழவும் வேண்டும்'' என்று கரிசனையை அவர் கூறினார். கிட்டத்தட்ட எல்லா இந்திய அறிக்கைகளிலும் 'சமத்துவம், மதிப்பு, நீதி, தன்மானம், அரசியல் செயல்முறை, அமைதி'' போன்ற சில வாலாயமான சொற்கள் (Buzz words) இருக்கும்.

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க 13ஏ ஐ செயல்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் ஈடுபாட்டையும் உறுதிப்படுத்துகின்ற வகையில் இந்தியா மற்றும் இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரத்துவத்தினரால் மேலும் பல அறிக்கைகள் வெளியிடப்படலாம். ஆனால் நமது குடியரசுத் தலைவர் 2017 இல் அவரது சகோதரர்களைப் போல, மற்ற அமைச்சர்களைப் போல செயலூக்கமான அரசியலில் ஈடுபடாதகாரணத்தால், இந்த அறிக்கைகளில் சில அவருக்கு புதியதாக இருக்கலாம். எனினும், 13ஏ பற்றிய இந்திய அணுகுமுறைகளைப் புரிந்து கொள்ள, அவருக்கு நன்கு தெரிந்த இரண்டு அண்மித்திய அறிக்கைகளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



சனாதிபதி கோத்தபாய இராசபக்சவின் அரச செலவின் போது பிரதமர் நரேந்திர மோடி, "சமத்துவம், நீதி, அரமைதி, மரியாதை ஆகிய தமிழர்களின் வேட்கைகளை நிறைவேற்றுவதற்காக நல்லிணக்க நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் என நான் நம்புகிறேன். அதில் 13வது திருத்தத்தை செயல்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்றார். வாலாயம்ப்பான சொற்களைக் கவனியுங்கள். சனாதிபதி கோத்தபாய இராசபக்ச நேரடியாகப் பதிலளிக்காமல் "இன, மத மற்றும் வாக்களிப்பு பேதமின்றி அனைத்து இலங்கையர்களுக்கும் சனாதிபதி'' என்று கூறினார்.

இந்தியா இலங்கை இருதரப்பு உச்சி மாநாடு குறித்து இணைச் செயலாளர் அமித் நரங் வெளியிட்டுள்ள மேற்கோள் "அமைதியையும் நல்லிணக்கத்தையும் அடைய இலங்கை தனது 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை செயல்படுத்த வேண்டும்'' என பிரதமர் மோடி, பிரதமர் மகிந்த இராசபக்சவிடம் வலியுறுத்தியுள்ளார். சமத்துவம், நீதி, அமைதி, கண்ணியம் ஆகியநோக்கங்களை நிறைவேற்ற இலங்கையின் புதிய அரசு செயல்பட வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.'' வாலாயச் சொற்கள். அரசியல் அறத்தை ஒதுக்கி, அது 'அதன் 13ஏ செயல்படுத்த வேண்டும்' மற்றும் 'மே'. மேலே கூறப்பட்ட பல சாதகமான மேற்கோள்களுடன் நான் இந்த வலியுறுத்தலால் வியப்படையவில்லை.

இவை 'அடுப்பில்-புதிய' அறிக்கைகள் (பிந்தையது வெறும் பதினைந்து நாட்கள் பழையது) மற்றும் பிரதமர் மோடியின் நினைவுகளில் நன்கு பதிக்கப்பட்ட எண்ணங்கள். பிரதமர் மோடி எளிதில் மறந்துவிடுவார், இந்தியாவை மீண்டும் மீண்டும் ஏமாற்றினால், கோரிக்கைகளை கைவிடவோ, மன்னிக்கவோ செய்வார் என நம்பி நம்மை நாமே ஏமாற்றக்கூடாது! அது மோடியா, சிங்கா அல்லது கிரு'ணாவா அல்லது மேனனா எவரானலும் சரி, அந்த வாலாயச் சொற்கள் ஒன்றே.

இங்கு, பிரதமர் மோடி, பிரதமர் சிங் (2012 இல்) போல தனது "கவலைகளை'' வெளிப்படுத்தினார். யு.என்.சி.எச்.ஆர் 2021 ஐ பொறுத்தவரை, பிரதமர் சிங் போல் அவர் செயல்படுவதைத் தவிர்ப்பார் என நான் விரும்புகிறேன். அரசியல் பிளவுகள், அரசியல் ஆதாயங்கள், அரசியல் பிளவுகள், அரசியல் ஆதாயங்கள் எதுவாக இருந்தாலும் இந்திய அரசியல்வாதிகள் தமிழ் வேட்கைகளை மூலதனமாக்குவார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தப் பின்னணியில், சனாதிபதி கோத்தபாய இராசபக்ச 19 ஏ இல் சனாதிபதி கடமைகளை நிறைவேற்றுவதற்கு 33(1)(ஆ) உறுப்புரையை இல்லாது செய்வதன் மூலம் "தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்தையும்'' ஊக்குவிப்பதில் இருந்து விலகியுள்ளார். இந்த இரண்டு கடமைகளையும் அவர் ஏற்கத் தயாராக இல்லை என்று அது தீவிரமாகக் கூறுவாரேயானால் 13ஏ ஐ ஒழிப்பது நிச்சயமாக விரும்பத்தகாத எதிர்விளைவை ஏற்படுத்தும்.

சர்வதேச பொறுப்புகள்

இந்தியர் மட்டுமின்றி, திம்புவிலிருந்து தொடங்கி, பான் கீ மூன் மற்றும் ஐநாமஉ அவை போன்றவற்றுடன் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது சிறிலங்கா சமாதானத்தை உருவாக்குதல் அதிகாரப் பகிர்வு குறித்து சர்வதேசத்தின் கழுகுப் பார்வையில் இருந்து வந்திருக்கிறது.

அமைதிப் பேச்சுவார்த்தையின் போது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு ஒஸ்லோ அறிவிப்பு ஆகும். பேராசிரியர் பீரிஸ் அரசாங்க தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் பிரிவினையைக் கைவிட்டு அதிகாரப் பகிர்வுக்கு ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும் என்று அன்டன் பாலசிங்கத்தை நம்பவைக்க அவரது (பேராசிரியர் பீரீஸ்) தெளிவான வெளிப்பாட்டை உண்மை வாதங்கள் மற்றும் பரந்த அறிவைக் கண்டேன். பேராசிரியர் பீரிஸின் ஈடு இணையில்லாத கல்விசார் கல்வித் தாக்குதலுடன் (நான் போற்றுகின்ற) உரையாடினார். அன்டன் பாலசிங்கம் கலந்துரையாடலைக் குறைத்து -அநேகமாக பிரபாகரனுடன் - வெளிப்புற ஆலோசனைகளைப் பெறப் பின்வாங்கினார் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

ஒஸ்லோ அறிவித்தலை (Oslo Communique) என்ற அமைப்பின் சார்பில் பேராசிரியர் பீரிஸ் (அன்றைய நாயகன்)தான். "ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூட்டாச்சி கட்டமைப்பின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் உள்ளக சுயாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு இணைப்பாட்சித் தீர்வை ஆராய்வதற்கு'' கட்சிகள் உடன்பட்டன.

ஊடக மாநாட்டில் பேசிய பேராசிரியர் பீரிஸ் ஒருமித்த நாட்டுக் கட்டமைப்பிற்குள் - பிரிவினை நீங்கலாக - பரந்த அதிகாரப் பகிர்வைப் பாராட்டினார். "நாம் யுத்தத்தைக் கைவிட்டு ஒரு அரசியல் தீர்வை நம்பினால் இப்போது நாம் .... அதிகாரப் பகிர்வு தவிர வேறு எந்த கிராமப்புற பழங்குடி அரசியல் தவிர வேறு இருக்க முடியாது - கூட்டாட்சி தீர்வின் தன்மை பற்றிய அடிப்படையைத் தவிர.''




13ஏ என்பது வரலாற்று உறைவிடம் மற்றும் கூட்டாட்சி கட்டமைப்பைப் பற்றிப் பேசும் இந்திய - இலங்கை உடன்பாட்டோடு ஒப்பிடும்போது ஒஸ்லோ அறிவித்தல் குறைவான அதிகாரப் பரவலாக்கல் மற்றும் கூட்டாட்சித்தன்மை உடையதாகும். எனவே, ஒஸ்லோவை மறந்து விட்டு, 13ஏ க்கு எதிரான எதிர்ப்பாளர்களை அமைதிப்படுத்துவதில் பேராசிரியர் பீரிஸ் தலைமை வகிக்க முடியும். அமைச்சர் அலி சாப்ரிக்கு எந்த அவமரியாதையும் இல்லாமல், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தனது அனுபவத்துடன் (குறிப்பாக இந்தியர்களுடன்) 13ஏ ஐ சமாளிக்கப் பொருத்தமானவர் என என்னால் கூறமுடியும். முரண்பாடாக, இது அவரது தகுதியின்மையும் ஆகும். ஏனெனில் அவரது கடந்தகால நிலைப்பாடு 13ஏ ஐ ஒழிக்க வேண்டும் என்ற அழைப்புகளுக்கு ஏற்ப இல்லை!

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர், சனாதிபதி மகிந்த இராசபக்ச, "13ஏ ஆவது திருத்தத்தைச் செயல்படுத்துவது மற்றும் புதிய சூழ்நிலைகளில், தமிழ் கட்சிகள் உட்பட, சகல கட்சிகளுடனும் ஒரு பரந்த கலந்துரையாடலைத் தொடங்க வேண்டும் என்பது எனது தீர்க்கமான நிலைப்பாடு'' என அறிவித்தார். மேலும் இந்தச் செயல்முறையை மேம்படுத்தவும் இலங்கையில் நீடித்த சமாதானத்தையும் அபிவிருத்தியையும் கொண்டு வருவதற்கும் நான் உறுதியோடு இருப்பதாகக்'' கூறினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, ஜெனீவாவின் ஐநாமஉ அவையில் பான் கீ மூனுக்க கொடுத்த வாக்குறுதிகளை உறுதிப்படுத்தும் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. 13ஏ ஐ செயல்படுத்துவதில் கொடுக்கப்பட்ட கடப்பாடு அது ஆகும். முதல் முறையாக, அவர் 13ஏ க்கு ஒரு பன்முக உறுதிப்பாட்டைச் செய்தார்.

ஜனாதிபதி சிறிசேன - பிரதமர் விக்கிரமசிங்க அரசாங்கம் இன்னம் ஒருபடி மேலே சென்று 2015 ஒக்டோபர் மாதம் ஐநாமஉ அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அதனை உள்ளடக்கி இருந்தது. ஆனால் புதிய அரசியல் சட்டத்தை நிறைவேற்றவோ அல்லது 13ஏ உடன் செல்லவோ அவர்கள் தவறிவிட்டனர்.13ஏ க்கு அதிக சர்வதேச கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சாத்தியமான அரசியல் தந்திரங்களைக் கையாளுதல்

1990 களின் பிற்பகுதியில், பிராந்திய சபைகளை (RCs) உருவாக்குவதற்கான அரசாங்க முன்மொழிவுகள் – அதாவது வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு பிராந்திய சபைகள் மற்றும் மத்திய கட்டுப்பாட்டிலான அம்பாறை தேர்தல் தொகுதியை ஒரு பிராந்திய சபையாக உருவாக்கவும் - யோசனைகள் இருந்தன. தொடர்ச்சியில்லாத முஸ்லிம்கள் வாழும் பகுதியில் பிராந்திய சபையை உருவாக்குவதற்கும் கூட இன்னொரு யோசனை இருந்தது. சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் திரு. அஸ்ராப் இந்த முன்மொழிவுகளின் தீவிர ஆதரவாளராக இருந்தார்.

13ஏ ஐ ஒழிப்பது ஒரு வெற்றிடத்தை உருவாக்கும். 20 ஏ ஐ ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் அலி சப்ரி மற்றும் ரொமேஷ் டி சில்வா குழு, உத்தேச அரசியல் யாப்பில் முன்மொழியப்பட்டுள்ள பிராந்திய சபைகளின் பிரேரணையை இணைப்பார்கள் என எதிர்பார்க்கலாம். சில வேளை திருத்தங்களுடன், முஸ்லிம்களுக்கு இது மிகவும் சாதகமாக இருக்கலாம். இது ஒரு கற்பனையான சூழ்நிலை, ஆனால் 13ஏ ஐ ஒழிக்க வேண்டும் என்று கோருபவர்கள் கவனமாக கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் அரசியல் சூழ்ச்சிகளையிட்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும், ஏனெனில் தவறான தீர்ப்பு 13ஏ விட அதிக சிக்கலை ஏற்படுத்தும்.

முடிவுரை

சுருக்கமாக, 13ஏ ஐ ஒழிக்கக் கோரும் எதிர்ப்பாளர்கள், உள்நாட்டு அரசியலமைப்பு, அரசியல், நிறுவன அமைப்புகள், இந்தியாவுடனான இருதரப்பு உடன்பாடு, குறிப்பாக இந்தியாவிற்கும் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் உள்ள சர்வதேச நிறுவனங்களுக்கும் அளித்த பல உறுதிமொழிகளை நன்கு அறிந்து வைத்துள்ளனர். 13ஏ ஒழிக்கப்படாவிட்டால், அரசியல், பாதுகாப்பு, பொருளாதார மற்றும் அரசியல் நிறுவன அமைப்பு ரீதியான ஆபத்துக்களை முன்கணிக்கும் தேசியவாத கூறுகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டிவரும்.

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால், அதன் சர்வதேச பரிமாணங்கள் மிகவும் முக்கியமானவை. கலாநிதி ஜெகன் பெரேரா எழுதுவது போல்: "சர்வதேச அரசாங்கங்களை கையாள்வதில், அதே போல் இன்னும் அதிகமாக இல்லை என்றாலும் உறுதிப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதும் முக்கியமானது. அடிக்கடி வாக்களிக்கும் அப்பாவி பொது மக்களைப் போல சர்வதேச அரசாங்கங்களை ஏமாற்ற முடியாது.'' இது மகிந்த இராசபக்ச ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்டது. இப்போது நடப்பது கோத்தபாய இராசபக்ச ஆட்சி. ஆனால், அரசாங்க மாற்றங்களைப் பொருட்படுத்தாமல், சர்வதேச சமூகத்தின் சிந்தனை இலங்கையின் பொறுப்புக்களைப் போலவே உள்ளது.

இந்தியாவில் ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகளின் கொள்கைகள் 13ஏ மற்றும் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சீரான நிலைப்பாடு உள்ளது. ஆயினும்கூட, இந்தியாவின் கவனம் இந்திய - பசிபிக், சீன அச்சுறுத்தல்கள், சுதந்திர வர்த்தகம், முதலீடுகள் போன்ற வற்றிற்கு மாறியுள்ளதுடன், நிலுவையில் உள்ள பிரச்சினைகளை பரஸ்பர நன்மைக்காக (கிருஷ்ணா கூறியது போல்) ஒரு அரசியல் பார்வை யுடன் ஒரு புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர இணக்க உணர்வுடன் தீர்ப்பதற்கான வாய்ப்பு இருக்கலாம்.''

13ஏ ஐ ஒழிப்பது புவிசார் அரசியல், அரசியல், பொருளாதார, இராஜதந்திர, பாதுகாப்பு வாரியாக செலுத்த வேண்டிய விலையை ஏற்படுத்தக்கூடும். 13ஏ ஐ ஒழிக்க நினைப்பவர்கள் சாத்தியமான இருப்புநிலைகளை மதிப்பீடு செய்ய வேண்டும், பேச்சுவார்த்தைகள் மற்றும் சமரசங்கள் மூலம் மாற்று வழிகளை எடைபோட வேண்டும். கிடைக்கக்கூடிய இந்த விருப்பங்களை மறந்துவிடுவதும், அவற்றின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதும், 13ஏ ஐ ஒழிக்கப் பயன்படும். ஆனால் இது மகிழ்ச்சியான செயல் அல்லது மகிழ்ச்சியான முடிவு என்று அர்த்தமல்ல. (முற்றும்)


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# இவ்வார ராசிபலன்

**18-12-2020 வெள்ளி தொடக்கம் 24-12-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** தட்டிப்போன வாய்ப்புகள் தானாகக் கிடைக்கக் கூடிய நல்ல வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். மத வழிபாடு மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,4,5,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,N




**ரிஷபம்:** கடைத்தெடுத்த வலைகள் காணாமல் போகக்கூடிய நல்ல வாரம். ஆதாயம் பெருகும். சகோதரியினால் நன்மை உண்டு. உடல் நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக் கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பருப்புதானம் பாவம் போக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அலங்காரப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Y




**மிதுனம்:** சுமுகமான சூழ்நிலைகள் சமூகத்தில் அமையக் கூடிய நல்ல வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**கடகம்:** மாற்று யோசனையை வெளிப்படுத்தி ஏற்றம் காணக்கூடிய நல்ல வாரம். செயல் திறமை வெளிப்படும். சிந்தனைகள் மேலோங்கும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத் தொழிலில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத் தொழில் லாபம் தரும். உணவுத் தொழில் உயர்வு தரும். தொலைபேசி தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: கொண்டத்துக் காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 0,1,7,2
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**சிம்மம்:** வயதுக்குத் தகுந்த வளம் கிடைக்கக்கூடிய நலமான வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கன்னி:** வழக்கத்திற்கு அதிகமான வரவுகள் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,0,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L




**துலாம்:** கடுமையான முயற்சிகளுக்குப் பெருமையான வாய்ப்பு கிடைக்கக்கூடிய வாரம். வயிற்று உபாதைகளும் உண்டு. வாழ்வில் வசந்தம் உணடு. வாகனத்தால் செலவு உண்டு. வாழ்க்கையில் மேன்மை உணடு. சிறப்புகள் சேரும் நாள். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். மற்றவர்களால் மேன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**விருச்சிகம்:** மகிழ்ச்சியும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கனிவான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னீஸ்வர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I, P




**தனுசு:** வாட்டிவதைத்த வருத்தங்கள் வக்கனையாய் விலகக்கூடிய நல்ல வாரம். அமைதியான வாரம். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடிவரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: யானைப்பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,0,1,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**மகரம்:** பொலிவான மணவாழ்க்கை பொருத்தமாக அமையக்கூடிய பொன்னான வாரம். சகோதரியால் அனுகூலம் உண்டு. அபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன்சுமை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வர், அதிர்ஷ்ட எண்: 4,7,3,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,V




**கும்பம்:** முற்பகலிலேயே முக்கிய மாற்றங்கள் நிகழக்கூடிய நல்ல வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கனகதுர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**மீனம்:** அனந்தப் பயணமும் அதிஅற்புத மகிழ்ச்சியும் கிடைக்கக் கூடிய நல்ல வாரம். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. கௌரவம் உயரும். கலைத்துறை ஈடுபாடு அதிகரிக்கும். மெத்தன போக்கு விலகும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. திருப்தி ஏற்படும் நாள். ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 8,2,5,6
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,R




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.



Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# "தாமிரபரணி ஆற்று மணலில் கனிமவளங்கள்: பாதுகாக்கவேண்டியது அரசின் கடமை"-- உயர்நீதிமன்றம் உத்தரவு



தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தார்:

"தூத்துக்குடி மாவட்டம் முறப்பநாடு போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில், அகரம் கிராமத்தில் இரவு நேரங்களில் மணல் கடத்தல் நடக்கிறது. சட்டவிரோத மணல் குவாரிகளுக்கு தடை விதிக்க வேண்டும்." இவ்வாறு அவர் கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் கிருபாகரன், புகழேந்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, நெல்லை "பொலிவுறு நகர" (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தின்கீழ், நவீன பஸ்நிலைய கட்டுமானப்பணிகளுக்கு வாணம் தோண்டியபோது அள்ள அள்ள புதையல் போல் கிடைத்த ஆற்று மணலை விற்றது பற்றியும், தாமிரபரணி ஆற்றுப்பகுதிகளில் மணல் கடத்தல் புகார் தொடர்பாகவும் நேரடி ஆய்வு நடத்திய விவரங்களை, வக்கீல் கமிஷனர்கள் நீதிபதிகள் முன்பு தாக்கல் அறிக்கையாக செய்தனர்.

அதில், "தாமிரபரணி ஆற்று மணலில் கார்னெட், இல்மனைட், ரூட்டில், சிர்கான், மோனோசைட் என பல்வேறு கனிமங்கள் உள்ளன. அணு சக்திக்கு தேவையான கனிமங்களும் இருக்கின்றன. இவை அரிய வகை கனிமங்கள்" என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:-

"தாமிரபரணி ஆற்று மணலில் அணுசக்தி மற்றும் பல்வேறு வகை கனிமங்கள் இருப்பதை கடந்த 1942, 43-ம் ஆண்டுகளிலேயே டாக்டர் ஜாக்கோப்சன் என்பவர் ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளார். அப்போதைய பிரிட்டீஷ் அரசாங்கமும் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அரசாணையில் நெல்லை, ராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களுக்கு உட்பட்ட கிழக்கு கடற்கரை மணலில் பல்வேறு தாதுவளங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளது.



ஆனாலும் கடந்த 75 ஆண்டுகளாக தாமிரபரணி ஆற்று மணலையும், அதில் உள்ள தாதுவளங்களையும் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கனிமங்களை பாதுகாக்க வேண்டியது அரசு அதிகாரிகளின் கடமை. ஆனால் அவர்கள் எந்த அடிப்படையில் மணல் அள்ள அனுமதிக்கிறார்கள்?

எனவே தாமிரபரணி ஆற்றில் இருந்து மணலை கட்டுமானப்பணிகள் உள்பட எந்த பணிகளுக்கும் எடுக்காமல் பாதுகாக்கப்பட வேண்டும். வக்கீல் கமி'னர்களின் அறிக்கையின் அடிப்படையில் தாமிரபரணி ஆற்று மணலை, மத்திய அணுசக்தித் துறை செயலர், பொதுப்பணித்துறை செயலர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்து பதில் அளிக்க வேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். பின்பு விசாரணையை வருகிற 21-ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

***மணிராஜ்,***
***திருநெல்வேலி***

# சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி

***துண்ணையூர் கலாநிதி ராம தேவலோகேஸ்வரக் குருக்கள்***
***[சாரதா பீடம் ஜோதிடம்]***

*நவக்கிரகங்களின் மிகவும் முக்கியத்துவமாக கிரகம் "சனீஸ்வரன்" நமது கர்ம வினைகளுக்கு ஏற்புடைய பலா பலங்களை பாராபட்சம் இன்றி தருகின்றவர் யாழ்ப்பாணம் இரகுநாதஐயர் வாக்கிய பஞ்சாங்க கணிதப்படி சார்வரி வருடம் மார்கழி மாதம் 11ம் நாள் சனிவாரம் மாலை 6மணி 03 நிமிடநேரம். (26-12-2020 கனடா நேரம் 6.03மாலை) சனிபகவான் தனுசு ராசியில் இருந்து தனது சொந்த வீடான மகர ராசிக்கு பெயர்ச்சி பெறுகின்றார். இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தப் பெயர்ச்சி அமையும். இதன் மூலமாக அதிகமான நன்மைகள் பெறகின்ற ராசிகளாக இடபம், சிம்மம், விரட்சிகம். மீனம் அமைகின்றன. மத்திமமான பலன் பெறும் ராசிகள் மேடம், கடகம், கன்னி அமைகின்றன. மற்றும் சிரமமான பலன்களை துலாம், தனுசு, மகரம், கும்பம் மிதுனம் ராசிகள் பெறுகின்றன. பொதுவாகவே சிரமபலன் கொண்ட ராசியினர் சனிவாரம் உள் எண்ணெய் சிட்டி ஏற்றி சனீஸ்வரனுக்கு நீலநிற பூவால் சங்குபுஷ்பம், நீலோத்பவம் மலரினால் அர்ச்சனை வழிபாடு செய்து உங்களின் குல தெய்வ வழிபாடும் செய்து கொள்வது மிகவும் நல்லது. ஏழரைச்சினி, அட்டமச்சனி, அஷ்டார்த்தசனி என்பன அமையும் ராசிகளாக மிதுனம், துலாம், தனுசு, மகரம் நிதானமாக செயற்பட வேண்டும். ஆலயங்களுக்கு இரும்பு தானம் வழங்குவது மிகவும் சிறப்பாகும். ஆலய பராமரிப்பிற்கு உரிய மண்வெட்டி, கத்தி, வாள், அலவாங்கு இரும்பிலான கதவு போன்ற திருப்பணிகள் செய்வது மிகவும் நல்லது. நேர்மையான செயற்பாடும் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வாழ்வும் செய்யும். தொழிலிலே இன்முகமான சந்தோஷமான செயற்பாடும், குடும்ப நிலையில் தார்மிகமான கடமையுணர்வுடைய செயல்பாடும் அறம்தவறாத இறை வழிபாடுகளும் எப்போதும் எம்மை பெரும் வீழ்ச்சியில் கொண்டு செல்ல இடம் கொடுக்காது. எனவே அனைவரும் மனித நேயம் கொண்டு செயற்படுவோம். அனைவர் வாழ்விலும் இன்பம் பொழிய இறையருளட்டும்!.*

**மேடராசி:**
**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் நட்சத்திரங்கள்)**

*எதையும் வெளிப்படையாக முகத்திற்கு நெரே பெசி விடுகின்ற குணமும், எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கும் கொண் டேராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு சனீஸ்வரன் ஜீவனஸ்த்தானமாகிய 10ம் இடத்திலே அமைகின்றார்.* எனவே சற்று அலைச்சல் நிலைகளை அதிகமாக கொடுப்பார். தொழில் சார்ந்த நிலையில் எதோ ஒரு வடிவிலே பிரச்சனை உங்களை சூழும் நிலையிருக்கும். எனவே தொழில் நிலையில் மிகவும் பொறுமை, நிதானத்தோடு செயற்படவேண்டும். தேவையற்ற வீண் பிரச்சனைகளை தொழில் நிலையில் எதிர் கொள்ள வேண்டிய சூழல் அமையும். எனவே அதற்கு ஏற்ப செயல்படவேண்டும். குடும்ப நிலையிலும் சிறு. சிறு மனச்சஞ்சலம். பிரச்சனைகள் சூழும். கொடுக்கல், வாங்கல் மிகவும் பொறுமை, நிதானம் கொண்டு செயற்படவேண்டும். பணவரவு மத்திமமாகவே அமையும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை இருக்கும். பெண்களுக்கு மனச்சஞ்சலம். தேவையற்ற வீண் பிரச்சனைகள், உடல் நலக்குறைவு போன்ற பலாபலங்கள் அமையம். மாணவர்களின் கல்வி நிலையிலே கூடுதலான முயற்ச்சி எடுக்க வேண்டும். பொதுவாகவே எந்த விடயத்தை எடுத்தாலும் சற்று போராட்டமும். இழுபறி நிலைகளும் அமைந்தே பின் உங்கள் முயற்ச்சியை அடையும் நிலையேற்படும். அதற்கு ஏற்ப பொறுமை, நிதானத்தோடு செயற்படுவதே மிகவும் நல்லது. இந்த சனிப்பெயர்ச்சியில் பெரு நன்மைகளை எதிர்பார்க்க முடியாத நிலையே!

**இடபம்:**
**(கார்த்திகை 2.3,4ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1ம் பாதம்)**

அமைதியாக இருந்து பல யுத்திகளோடு செயற்பட்டு உங்களின் வெற்றியை தொடும் இடபராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு சனிபகவான் பாக்கியஸ்த்தானம் எனப்படும் 9ம் இடம் அமைவது எல்லாவகையிலும் அனுகூலமான நற் பலன்கள் பெறக்கூடிய நிலை அமையும். எதிர்பார்ப்புகளின் நல்ல வெற்றிகள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும் நிலையுண்டு. தொழில் நிலை சார்ந்த முன்னேற்றம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். எதிர்பாராதவகையில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நிலை, குடும்ப நிலை சார்ந்த நன்மைகள் அமையும். உறவினர்களின் மூலமாக நன்மை ஏற்படும். புதிய தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் இருக்கும். வழக்கு விவகாரங்களில் சுமுகமான நிலை அமையும். நீண்ட நாட்களாக வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரும். தந்தை வழி சொத்துக்கள் சேர்கின்ற பலன் இருக்கும். பொதுவாக கடந்த இரண்டரை ஆண்டுகள் அட்டமத்துசனி" சஞ்சாரம் மூலமாக சிரமம் எதிர் கொண்ட உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி மிகவும் சிறப்பான அனுகூலமான நன்மைகள் கொடுக்கும் பலன் இருக்கும். எனவே உங்கள் முயற்ச்சிகளை நீங்கள் தைரியமாக மேற்கொள்ள இந்த சனிப்பெயர்ச்சி உகந்தது சிறப்புகள் பலவுண்டு.

**மிதுனராசி:**
**(மிருகசீரிடம் 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 4ம் பாதம்)**

மிகவும் நிதானத்தோடு எல்லா விடயங்களையும் செயற்படுத்தி கையாளும் ஆளுமை கொண்ட மிதுனராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு இந்த சனிப்பெயர்ச்சியானது "அட்டமத்துசனியாக" சஞ்சாரநிலை பெறுகின்றார். எனவே பலவகையிலும் பிரச்சனைகளையும், சிக்கல் நிலைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை இருக்கும். அதற்கு ஏற்ப மிகவும் பொறுமை, நிதானமுடன் செயற்படவேண்டும். தொழில் நிலைகளில் தேவையற்ற வீண் பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டி வரலாம். எதிர்பாராதவகையில் உடல் நிலை உபாதைகள் அமையும். பணவரவு சற்று மத்திமமானதாகவே இருக்கும். கொடுக்கல் வாங்கலில் மிகவும் பொறுமை. நிதானத்தடன் செயற்பட வேண்டும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை இருக்கும். பண நஷடம், பொருள் நஷ்டம், வாகன நஷ்டம் என்பன திடீரென அமையும் நிலை இருக்கும். குடும்பநிலையிலே தேவையற்ற வீண் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைகள் அமையும். உறவினர்களுடன் மனச்சஞ்சல் நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு சஞ்சலநிலை அதிகரிக்கும். மாணவர்களின் கல்விநிலையில் சற்றுக்கூடியகவனம் எடுக்க வேண்டும். எதையும் மிகவும் நிதானமுடன் கையாளவேண்டும். இந்த சனிப்பெயர்ச்சியில் நீங்கள் உண்டு, உங்கள் வேலையுண்டு என இருப்பதே நன்று!

**கடகம்: (புனர்பூசம் 4ம் பாதம். புசம். ஆயிலியம்)**

எல்லா விடயங்களையும் மிகவும் எளிமையாகவே செயற்ப்பட்டு வரும் கடகராசி அன்பர்களே! உங்கள் ராசி நிலைக்கு சனீஸ்வரன் கண்டச்சனி 7ம் இடம் அமைந்திருக்கின்றார். எல்லாவகையிலும் குடும்பத்திலும் பல வகையான பிரச்சனைகள் கொடுப்பார். கணவன், மனைக்கிடையே வாக்க வாதம், மனச்சஞ்சலம் தேவையற்ற பிரச்சனைகள் அமையும். உறவினர்களின் மூலமாக தெவையற்ற சிக்கல், இழுபறி நிலை ஏற்படும். எடுக்கின்ற முயற்ச்சிகளில் சிற, சிறு சிக்கல்கள் இழுபறி நிலைகள் தொடரும். மன நிலையில் அதிகமான சஞ்சலம் தேவையற்ற யோசனை என்பன அமையும். குடும்பநிலை சார்ந்த மருத்துவ செலவுகள் அதிகமாகும். எதிலுமே மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் செயற்பட வேண்டும். திருமணம் போன்ற சுபகாரிய நிலைகளில் இழுபறி தாமதநிலை அதிகரிக்கும். மாணவர்கள் கல்வி நிலையில் கூடுதலான முயற்ச்சி எடுக்க வேண்டும். எல்லாவகையிலும் இந்த சனிப்பெயர்ச்சி பலவித சிரமங்களையும் கொடுக்கும் நிலயுண்டு. அதற்கு ஏற்ப மிகவும் நிதானமாக செயற்பட்டு அனுகூலம் பெறுக!




# அன்பின் தொனி - 591

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவன் நல்லவராகவே இருக்கிறாா**

சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார். ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம் புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமைகொண்டேன். மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை, அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள், மனுஷர் அடை-யும் உபாதியை அடையார்கள். ஆகையால் பெருமை சரப்பணியைப்போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும், கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக்கொள்ளும். அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது, அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது. அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமைபேசுகிறார்கள், இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள். தங்கள் வாய் வானமட்டும் எட்டப்பேசுகிறார்கள், அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது. ஆகையால் அவருடைய ஜனங்கள் இந்த வழியாகவே திரும்புகிறார்கள், தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்துவரும். தேவனுக்கு அது எப்படித் தெரியும்? உன்னதமானவருக்கு அதைப்பற்றி அறிவு உண்டோ? என்று சொல்லுகிறார்கள். இதோ, இவர்கள் துன்மார்க்கர்ளூ இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள். நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன். நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன். இவ்விதமாய்ப் பேசுவேன் என்று நான் சொன் னேனானால், இதோ, உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத் துரோகியாவேன்.

**- சங்கீதம் 73: 1-15**

**எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்**

இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன், நான் தேவனுடை-ய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள். நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல், ஆண்டவரே, நீர் விழிக்கும்போது, அவர்கள் வே'த்தை இகழுவீர். இப்படியாக என் மனம் கசந்தது, என் உள்ளிந்தி ரியங்களிலே குத்துண்டேன். நான் காரியம் அறியாத மூடனானேன், உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன். ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன், என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது, தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார். இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள், உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம், நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்த ராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

**- சங்கீதம் 73: 16-28**

**தேவனே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்?**

தேவனே, நீர் எங்களை என்றென்றைக்கும் ஏன் தள்ளிவிடுகிறீர்? உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமது கோபம் ஏன் புகைகிறது? நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும், நீர் மீட்டுக்கொண்ட உமது சுதந்தரமான கோத் திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும். நெடுங்காலமாகப் பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப்பண்ணும், பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப் போட்டான். உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அடையா ளங்களாக நாட்டுகிறார்கள். கோடரி-களை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான். இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுகிறார்கள். உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி, உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டும் இடித்து, அசுத்தப்படுத்தினார்கள். அவர்களை ஏகமாய் நிர்த்தூ ளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப்போட்டார்கள். எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் காணோம், தீர்க்கதரிசியும் இல்லை, இது எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடத்தில் இல்லை. தேவனே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்? பகைவன் உமது நாமத்தை எப்பொழுதும் தூஷிப்பானோ? உமது வலதுகரத்தை ஏன் முடக்கிக்கொள்ளுகிறீர், அதை உமது மடியிலிருந்து எடுத்து ஓங்கி நிர்மூலமாக்கும். பூமியின் நடுவில் இரட்சிப்பு களைச் செய்துவருகிற தேவன் பூர்வகாலமுதல் என்னுடைய ராஜா. தேவரீர் உமது வல்லமையினால் சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து, ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தலை-களை உடைத்தீர். தேவரீர் முதலைகளின் தலைகளை நருக்கிப்போட்டு, அதை வனாந்தரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுத்தீர். ஊற்றையும் ஆற்றையும் பிளந்து விட்டீர், மகா நதிகளையும் வற்றிப்போகப்பண்ணினீர். பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது, தேவரீர் ஒளியையும் சூரி யனையும் படைத்தீர். பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டப்பண்ணினீர், கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர். கர்த்தாவே, சத்துரு உம்மை நிந்தித்ததையும், மதியீன ஜனங்கள் உமது நாமத்தைத் தூஷித்ததையும் நினைத்துக்கொள்ளும். உமது காட்டுப்புறாவின் ஆத்துமாவைத் துஷ்டருடைய கூட்டத்திற்கு ஒப்புக்கொடாதேயும், உமது ஏழைகளின் கூட்டத்தை என்றைக்கும் மறவாதேயும். உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும், பூமியின் இருளான இடங்கள் கொடுமையுள்ள குடியிருப்புகளால் நிறைந்திருக்கிறதே. துன்பப்பட்டவன் வெட்கத்தோடே திரும்ப விடாதிரும், சிறுமையும் எளிமையுமா-னவன் உமது நாமத்தைத் துதிக்கும்படி செய்யும். தேவனே, எழுந்தருளும், உமக்காக நீரே வழக்காடும், மதியீனனாலே நாடோறும் உமக்கு வரும் நிந்தையை நினைத்துக்கொள்ளும். உம்முடைய சத்துருக்களின் ஆரவாரத்தை மறவாதேயும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் அமளி எப்பொழுதும் அதிகரிக்கிறது. **- சங்கீதம் 74: 1-23**

*தொடரும்...*

# MORTGAGES & LOANS

**Residential / Commercial / Industrial / Investment Properties**

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்!

## MERRY CHRISTMAS & HAPPY NEW YEAR



## T.NESAN

*Subra*

**416-660-5656**

Off: 416-660-5656 | Fax: 647-351-3099
Toll Free: 1-844-878-2721
mortgage@nesan.ca | www.nesan.ca

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance, Renewal & Switches
- Multi Rental Properties
- Personal & Business Equity Line of Credit
- Truck, Personal & Business Equity Loans

Our Office:
1585 Markham Rd, Unit #406,
Toronto, M1B 2W1, Canada
Mortgage Alliance
Brokerage # 10530

SUBRA MORTGAGE SOLUTIONS

Powered by MORTGAGE ALLIANCE

**WE DEAL WITH ALL BANKS**

Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | Street Capital Bank of Canada | radius financial
First National Financial LP | Equitable Bank | Home Trust | RMG mortgages | MCAP

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
RESP Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN உதயன்
திசை எட்டும் தமிழ் ஓங்கி ஒலிக்கும் ...

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree 416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1289 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 18, 2020

# யாழ்ப்பாணத்தில் தீயிட்டு அழிக்கப்பட்ட பொது நூலகத்தின் நினைவாக மாபெரும் நூலகத்தை கனடாவில் நிறுவ வேண்டும் என்கிறார் சுவாமி நித்தியானந்த பரமஹம்சர்



டிசம்பர் மாதம் 13ம் திகதி, கனடாவாழ் மக்களுக்குக் குறிப்பாக தீட்சை பெற்றுக்கொண்ட மக்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சுவாமி நித்தியானந்த பரமஹம்சர் அவர்கள் கனடாவிலுள்ள தன்னுடைய பக்தர்கள், தொண்டர்கள் ஆகியோர்களைச் சந்தித்து உரையாற்றியிருக்கின்றார்.இது தொடர்பாக செய்தியாளர்களுக்குத் தெரிவித்த கனடா கைலாசம் அமைப்பினர், சுவாமி நித்தியானந்த பரமஹம்சர் அவர்கள் மேலும் பல ஆச்சரியமான விடயங்களையும் தங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளதாவும் அறியப்படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கனடாவின் ரொறன்ரோ மாநகரில் கைலாயம் அமைப்பதற்கான பணியினை விரைவில் முன்னெடுக்கும்படியும், அதற்காக கனடிய அரசுடன் தொடர்புகளை முன்னெடுக்கும்படி சுவாமி அவர்கள் கேட்டுள்ளார். அத்துடன் இலங்கை யாழ்ப்பாணத்தில் தீயிட்டு அழிக்கப்பட்ட யாழ் பொது நூலகத்தின் நினைவாக ஒரு மாபெரும் நூல்நிலையமொன்றை அமைப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையானபோது பல மில்லியன் கணக்கான நூல்களம், ஓலைச் சுவடிகளும் எரிந்து சாம்பலாகிவிட்டன. அதை ஈடுகட்டத்தான் இந்த நூலகம் அமையவுள்ளதெனவும், அது அமையவிருக்கின்ற இடம் கனடாவில் அதிகமான இந்துக்கள் வாழுகின்ற மார்க்கம் பகுதி எனவும் குறிப்பிட்டிருந்தார் *(உள்ளே 21ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

# ஒன்றாரியோ மாகாணத்திலுள்ள நகரசபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை மாகாண அரசு வழங்கியுள்ளது



நகரசபைகளுக்கு நிதியுதவி அளிக்கவும், எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரவுசெலவுகளில் இப்போதைய செலவுகளினால் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையின் தாக்கம் நெருக்கடிகளை ஏற்படுத்தாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்குமென ஒன்றாறியோ அரசாங்கம் மேலதிகமாக 695 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்நிதி முதலீடுானது, கடந்த கோடை காலத்தில் அறிவிக்கப்பட்ட மத்திய - மானில அரசுகளின் “பாதுகாப்புடன் மீள ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தத்தின்“ முதற்கட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுடன், கோவிட்-19 காலகட்டத்தில் நகரசபைகளுக்கும் அவற்றுடன் இணைந்து இயங்கும் சக கட்டமைப்புகளுக்கும் முக்கியமான சேவைகளை வழங்கவும் உதவும். *(தொடர்ச்சி 5ம் பக்கம்)*

# கனடா சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உணவு வங்கிக்கு உணவுப் பொருட்கள் சேகரிக்கும் திட்டம்




கனடாவில் ஸ்காபுறோ நகரில் மார்க்கம் வீதியில் இயங்கிவரும் சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உணவு வங்கிக்கு உலர் உணவுப் பொருட்கள் சேகரிக்கும் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. *மேலதிய தொடர்புகளுக்கு 416-335-7700 அழையுங்கள்.*

# கனடாவிலிருந்து இலங்கை, இந்தியா செல்வதற்கு வேகமான இணைப்புச் சேவையை இணைந்து வழங்குகின்ற Air Canada மற்றும் Qatar Airways விமான சேவை நிறுவனங்கள்

## Air Canada and Qatar Airways expand their relationship, in launching Air Canada's non-stop service between Toronto and Doha

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

AIR CANADA

MONTREAL, Dec. 16, 2020 - Air Canada announced today the start of a strategic co-operation agreement with Qatar Airways allowing both airlines to expand their relationship, in conjunction with the launch of Air Canada's non-stop service between Toronto and Doha. This new agreement will provide customers access to a multitude of connections across the Middle East, Indian subcontinent and Southeast Asia, through Qatar Airways' Doha hub. *(continued on page 12)*

QATAR AIRWAYS القطرية